DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative | kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com | Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1495 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 29, 2024

# கனடா ரொறன்ரோவில் பிரமாண்டமான மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவெழுச்சி நாள் நிகழ்வு

## காலை தொடக்கம் இரவு வரை அணியணியாக வருகை தந்து இதய தெய்வங்களுக்கு அஞ்சலி செலுத்திய தமிழ்க் கனடியர்கள்!




கடந்த 27ம் திகதி புதன் கிழமையன்று கனடா ரொறன்ரோ நகரில் பிரமாண்டமான மண்டபமான **TORONTO INTERNATIONAL CENTRE** என்னும் அழகிய மண்டபத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வு காலை தொடக்கம் இரவு வரை தொடர்ச்சியாக நடைபெற்றது. இந்த உணர்வுபூர்வமான நிகழ்விற்கு தொடர்ச்சியாகவும் அணியணியாகவும் வருகை தந்து இதய தெய்வங்களுக்கு அஞ்சலி செலுத்திய தமிழ்க் கனடியர்கள் மண்டபத்தில் நீண்ட நேரம் அமர்ந்திருந்து அங்கு இடம்பெற்ற மனதை உருக்கும் நடனங்கள்- விடுதலைப் பாடல் மாவீரர்களுக்கான பாடல்கள் மற்றும் உரைகள் என அனைத்து மேடை நிகழ்வுகளை அமைதியாக இருந்து பல உணர்வுகளை அனுபவித்துச் செய்தனர்.

இந்த அற்புதமான நிகழ்வை ஏற்பாடு செய்த மாவீரர் நினைவெழுச்சி குழுவினரை அனைத்து மக்களும் பாராட்டிச் சென்றனர்.

# கனடாவில் தமிழ் உணர்வாளர் நடிகர் கருணாஸ்!

## தனது 'சல்லியர்கள்' திரைப்படத்தை எமது மக்களுக்காக திரையிடும் நோக்கோடு அவரது பயணம்!

### எமது தாயக விடுதலைப் போரில் அயராது உழைத்த மருத்துவப் போராளிகளின் அனுபவங்களை திரைக்கு கொண்டுவரும் 'சல்லியர்கள்' திரைப்படம் வெற்றிபெற ஆதரவு வழங்கும் எம்.பி.பி லோகன் கணபதி அவர்களும் அவரது குழுவினரும்!




பிரபல நடிகரும் முன்னாள் சட்டசபை உறுப்பினரும் தமிழ் உணர்வாளருமான நடிகர் கருணாஸ் அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார். அண்மையில் அவர் தயாரித்து வெளியிட்ட தனது "சல்லியர்கள்" திரைப்படத்தை கனடாவில் எமது மக்களுக்காக திரையிடும் நோக்கோடு அவரது பயணம் அவரது பயணம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.



(தொடர்ச்சி 21.ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

அச்சு ஊடகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொண்டு
கனடாவில் தொடர்ச்சியாக வெளிவரும்

உதயன் பத்திரிகையின் 28வது ஆண்டு
பல்சுவைக் கலைவிழாவும்
நிதி சேர் இராப்போசன விருந்தும் . . .



# CANADA UTHAYAN's
# 28th Cultural Festival & Dinner Gala

Toronto Voice Of Humanity

**DEC. 14th 2024**

Guest Speaker from South India,
Film Director and Television Moderator
**Mr. Karu Palaniyappan**

சிறப்பு சொற்பொழிவாளராக, திரைப்பட இயக்குனரும்,
தொலைகாட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய
**கரு பழனியப்பன்**
கலந்து கொள்கின்றார்.
அத்துடன், இசை, மற்றும் நடனங்கள்

இடம்:
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough
(Near Lawrence Ave.)
காலம்:
14-12-2024 சனிக்கிழமை
நேரம்: 6:00 PM

For Tickets and Information: (416) 732-1608 or (647) 762-9512

Latika Gold House
35 Karachi Dr Unit 37, Markham ON L3S 0B5
www.latikagoldhouse.ca

COMPUTEK COLLEGE
Muraly Srinarayanathas, Chief Stracgy Officer
2425 Eglinton Ave East Suite 400, Toronto, ON M1K 5G8
Tel: 416-321-9911 ext. 320 Fax: 416-775-9323
Markham Campus, 7 Eastvale Dr, Suite 202, Markham, ON L3S 4N8, Tel: 905-471-3344
muraly@computek.edu / www.computek.edu

VIBRANT HOSPITALITY GROUP
OUR EXPERTISE: CONSTRUCTION & DESIGN, OPERATIONS, REVENUE MANAGEMENT, SALES & MARKETING, HUMAN RESOURCES

K T GROUP
PRESIDENT & CEO MR. KANA SELVA 647302 1189

KANAGAAMBIKAI PAWN BROKERS
Ontario approved Pawn Brokers. Pioneers and established leaders in the community
Tel:- 416 269 7198
2613 Eglinton Ave. East, Scarborough, ON M1K 2S2

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7

WOODBINE ENTERTAINMENT GROUP
Thani Shanmuganathan

SANTHA
FULL SERVICE FACILITIES OF GENERAL CONTRACTORS
Santha Tel: 416-200-5470
info@santha.ca
www.santha.ca

வீடு வாங்க விற்க
Raj Nadarajah
Dir: 416.333.6115

CROSSROAD SHUTTLE BUS SERVICES
647-801-7725

AMMA PAWN BROKER
அம்மா நகை அடைவு கடை
CASH FOR GOLD

BUY | SELL | INVEST
RE/MAX
RAJEEV SEBARASHA
www.recashrealtor.com
Dir: 905.226.8515

Residential & Commercial
Bala Logendralingam
647-447-1362
RE/MAX

MAHAANS
PICK & PRESS OIL MILL
ORGANIC BULK STORE

Make Someone Smile
www.babuflorist.ca

வீடு வாங்க விற்க
Baskaran Sinnadurai
RE/MAX ACE
416 880 8585
1286 Kennedy Rd, Unit 3, Toronto, ON, M1P 2L5

BAVAN TRAVEL AND TOURS
BAVAN LOGA

FRUITS HABY
5925 Victoria, Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

RE/MAX COMMUNITY
Rajeev Koneswaran
416 568 1078

JRB universal INC.
R.R.Rajkumar
647-289-6164

Anjappar
Healthy and Traditional

N.K.S DRAPERY & BLINDS FABRIC
KETHA 416.321.8420

INCOME TAX!
Selva Vettyvel
416 568 4301
905 471 4050

First Mortgage, Second Mortgage, Private Mortgage, Commercial Mortgage, Mortgage Renewals, Home Equity Line of Credit
Dir: 416-900-5636 Y. NESAN

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel: 647-344-6600

SRI NADARAJASUNDARAM
416-276-6666
RE/MAX ACE

CASH RUSSH
4049 Sheppard Ave. E, Scarborough, ON. M1S 1S8

Jeya Jeyakanthan
Sales Representative

Designs 2 Prints Ltd
ALL YOUR PRINTING NEEDS
Prabagar - 647.838.2290 / 416 292 4959

Tamil One
East FM 102.7
time FM
தேசம்
உலகத்தமிழர்
GTA VIDEO ENTERTAINMENT

Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy and Subscription Price: $1.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்    Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca    email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் மழையினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பாதிக்கப்பட்ட அனைத்த தரப்பினருக்கு உதவிகளை வழங்க புலம் பெயர் கரங்கள் நீள வேண்டும்

இலங்கையின் வடக்கு கிழக்கும் மற்றும் மலையகப் பகுதிகள் மழையினாலும் வெள்ளப்பெருக்கினாலும் மண்சரிவு மற்றும் வீடுகள் இடிந்து விழுந்தமை போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்பட்டு பாடசாலைகளிலும் பொது மண்டபங்களிலும் தங்கவைக்கப்பெற்று பராமரிக்கப்பெற்று வருகின்றனர் என்ற செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. அனைத்து நகரங்களிலும் உள்ள எமது செய்தியாளர்களும் கவலைகளைத் தரும் செய்திகளை தொடர்ச்சியாகத் தந்த வண்ணம் உள்ளனர். இவ்வாறான இயற்கையின் சீற்றத்தால் பெரும் இடர்கள் ஏற்பட்டு அழிவுகள் சம்பவிக்கின்றபோது, கடந்த காலங்களில் புலம் பெயர் மக்களின் கரங்கள் நீண்டு கொண்டே இருந்தன. அவர்களின் உதவிகள் அங்குள்ள மக்களின் துயர் துடைக்க பல வழிகளிலும் ஆதரவாய் விளங்கின.

கடந்த காலங்களைப் போலவே. தற்போதைய இக்கட்டான நிலையில் புலம் பெயர்ந்து வாழும் மக்களும் அவர்களில் பலர் நடத்திவரும் பொதுச் சேவையாற்றும் அமைப்புக்களும் தாராளமாக தங்கள் கரங்களை நீட்டி வருகின்றனர்.
இவ்வாறான வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு ஆகியன நிகழும் சந்தர்ப்பங்களில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களும் மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமே அதிகளவில் பாதிக்கப்பட்டு, உணவு, இருப்பிடம் எதுவும் இன்றி தவிக்கின்ற நிலைமைகளை நாம் செய்திகள் மூலமாகவும் புகைப்படங்கள் மற்றும் ஒளிப்படங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இவ்வருடத்தின் வெள்ளப்பெருக்கு காரணமாக நாட்டின் பல இடங்களில் உயிர் இழப்புக்களும் சம்பவித்துள்ளன.
கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கி நின்ற எமது புலம் பெயர் மக்கள் இந்த தடவையும் தங்கள் உதவிகளை வழங்க ஆயத்தமாகி உள்ளனர் என்ற தகவல்களை நாமும் பெற்றுவருகின்றோம்.

அதேவேளை அனர்த்ததினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங்களுக்கு தேவையான நிதியை அரசாங்கம் ஒதுக்குவதற்கு தயாராக உள்ளது எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் இலங்கையில் மழையினாலும் வெள்ளப் பெருக்கினாலும் பாதிக்கப்பட்ட அனைத்த தரப்பினருக்கும் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் அத்தடன் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள மலையகம் சார்ந்த நகரங்கள் மற்றும் கிரமங்கள் ஆகியவற்றில் பல இழப்புக்களோடு இரந்து நிற்கும் மக்களுக்கு உதவிகளை வழங்க புலம் பெயர் மக்கள் கரங்கள் மேலும் நீள வேண்டும் என்ற வேண்டுகோளை நாம் கனடாவிலிருந்து விடுக்கின்றோம்.!

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728



Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?

Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?



Not to Worry!

Please Call
Theven Kankesu
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
tvn28@hotmail.com
thevenk1.tk@gmail.com

ஸ்ரீலங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் (கனடா)
Sri-Lankan Ex-Tamil Police Officers' Club (Canada)

29th Annual Christmas Party & New Year Celebration

Special Events - Children's Program
Variety of Entertainment

Venue: Baba Banquet Hall
(3300 McNicoll Ave, Scarborough ON M1V 5J6)

Date: December 15th, 2024
Time: 10:30am to 3:30 pm

Sivabalan - 416-998-7482    Ariyathas 416-220-3765

மணமகன் தேவை
கணக்காளராக Toronto இல் பணியாற்றும் 31 வயதுடைய 5'1" உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 94 (77) 603 4886
Suresh Tharmalingam
Tel: (416) 801-3863
Fax: 1(855) 801-3863

For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

BASEMENT FOR RENT
MORNINGSIDE & SHEPPARD
2 Bedrooms bsmt for rent. sep. entance, Parking & laundry. Close to TTC & all facilities. Avail. immediately.
647.237.1403/416.616.0528

# வட மாகாண மக்கள் நலன் கருதி "நலனோம்பு மன்ற" உருவாக்க ஆலோசனை – ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல்

இலங்கை செய்திகள்
Sri Lanka News



வடக்கு மாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பல லட்சம் டொலர் நாட்டுக்கு வருமானமாக கிடைத்துள்ளது என கூட்டுறவுத் திணைக்களத்தால் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சின் மீளாய்வுக்கூட்டம் ஆளுநர் செயலகத்தில் 22.11.2024 வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தில் சில கிராமங்கள் அரசியல் ரீதியாகவும் பல்வேறு காரணங்களுக்காகவும் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு முன்னேற்றவேண்டும்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட தேவையுடைய மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கும்போது அவர்களுக்கு காணி இல்லை என்பதைக் காரணம் காட்டி வீடுகளை வழங்காமல் விடவேண்டாம். காணிகளை அவர்களுக்கு கண்டறிவதற்குரிய ஒழுங்குகளை நாங்கள் முன்னெடுப்போம்.

கடந்த காலங்களைப்போன்று பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். குறிப்பாக சில ஆலயங்களில் பின்பற்றப்படுவதைப்போன்று பனைஓலையிலான அர்ச்சனைப் பெட்டிகளை ஊக்குவிக்கவேண்டும், என்றார்.

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆணையாளர் ந.திருலிங்கநாதன், வடக்கு மாகாண பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்கள் கள்ளை உற்பத்தி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கும், உற்பத்தி வரியாகவும் அரசாங்கத்துக்கு பல மில்லியன் ரூபாவைச் செலுத்தியுள்ளன.

அதேபோன்று 2 தனியார் நிறுவனங்கள், பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து போத்தல் கள்ளை கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் ஊடாக பல லட்சம் டொலரை நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்துள்ளன.

கூட்டுறவுத் திணைக்களம் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக சங்கங்களுக்கு 6 சதவீத வட்டிக்கு கடனை வழங்குகின்றன. அதனை அவர்கள் மக்களுக்கு ஆகக்கூடியது 15 சதவீதம் வரைக்கும் வழங்க முடியும்.

ஆனால் வடக்கில் சில சங்கங்கள் வேறு சமாசங்களிடமிருந்து 15 சதவீத வட்டிக்கு கடனைப் பெற்று அவற்றை மக்களுக்கு 21 சதவீதம் வரைக்கும் வழங்குகின்றன. இது வடக்கு கூட்டுறவுத்துறைக்கு சவாலாக இருக்கின்றது, என்றார்.

இதன்போது வடக்கு ஆளுநர், அவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது எனவும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் பணித்தார்.

சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் செல்வி அகல்யா செகராஜா, திணைக்களத்தின் பல்வேறு வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அவற்றுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் தெரிவித்தார். மேலும் பணிப்பாளர், தம்மிடம் பல்வேறு உதவிகளைக்கோரி மக்கள் வருவதாகவும், ஆனால் தமது எல்லைக்குட்பட்டு அவர்களுக்குரிய உதவிகளைச் செய்ய முடியாத நிலைமை இருப்பதாகவும் தெரிவித்தார்.

அவ்வாறானவர்களுக்கு நன்கொடையாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்து உதவிகளைச் செய்யமுடியும் எனவும் அவ்வாறு உதவிகோரி வருபவர்களின் விவரங்களை வழங்குமாறும் ஆளுநர் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு மாகாணசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில், நலனோம்பு மன்றம் (welfare forum) ஒன்றை உருவாக்கி அதன் ஊடாக உதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண பிரதம செயலர் தெரிவித்ததுடன் அதற்கு கௌரவ ஆளுநர் அனுமதி வழங்கினார்.

# மூளாய் பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை சந்தித்த கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன்!



தொடர்ச்சியாக பெய்த அடை மழையால் வாழ்விடங்கள் பாதிப்படைந்த நிலையில் மூளாய்ப்பகுதி (ஜே/171) மக்கள் அங்குள்ள தேவாலயம் ஒன்றில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து அவர்களது நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

அதன் பின்னர் கடற்றொழில் அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், காக்கைதீவு மற்றும் மூளைப் பகுதிகளுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடினோம். அவர்கள் மிகவும் பாதிப்படைந்திருதிப்பதை நாங்கள் அவதானித்தோம். உண்மையில் இந்த நிலைமைகளுக்கு தீர்வு தேடிக் கொடுக்க வேண்டியவர்கள் அரசாங்கமும், அரசியல்வாதிகளும், அரசு நிறுவனங்களும் தான்.



இது ஒரு தொடர்ச்சியான பிரச்சினையாக உள்ளது. எனவே எதிர்வரும் காலங்களில் இந்த நிலைமையில் இருந்து உங்களை மீட்பதற்கு நாங்கள் சகல வேலை திட்டங்களையும் முன்னெடுப்போம்.

அதற்கான செயல்பாடுகளை நாங்கள் அண்மையிலேயே ஆரம்பித்து இருக்கின்றோம். இதன் போது குறித்த பகுதி மக்களின் கருத்துகளையும் நாங்கள் உள்வாங்கி செயல்படுவோம்.

இன்னும் சில நாட்களில் கடும்மழை பெய்யலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் அந்த நிலைமையையும் எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றேன் என்றார்.

# தாவரங்களை அடையாளம் காணுகின்ற தாவராவதானி போட்டி

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் நடாத்தும் தாவரங்களை அடையாளம் காணுகின்ற தாவராவதானி போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (26-11-2024) நல்லூர் திவ்ஜ ஜீவன சங்க மண்டபத்தில் காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

இயற்கை எனது நண்பன் என்ற பிரசித்தமான மேற்கோளுக்கு அமைவாக தாவரங்களை அடையாளம் காண்பதன் மூலம் தாவரங்களையும் இயற்கையையும் நேசிக்கக் கற்றுத்தருவதை நோக்காகக் கொண்டு இப்போட்டி ஒழுங்கமைக்கப்படுள்ளது.





தமிழ்த் தேசியபசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் இப்போட்டியில் பால், வயது வேறுபாடின்றி எவரும் பங்கு கொள்ளலாம். முன் பதிவு இல்லாமல் இப்போட்டியில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியும்.

வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்களோடு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுள்ளது.

# சவேந்திர சில்வா சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் உள்ளிட்ட மூவருக்கு எதிராக தடை விதிக்க கோரிக்கை

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட பாதுகாப்புப் படைத் தலைவர் உட்பட மூவருக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறு சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு பிரித்தானியாவை கேட்டுக் கொண்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி சவேந்திர சில்வா, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன மற்றும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையான் ஆகியோருக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் குழுவான சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பிரச்சாரம் (Sri Lanka Campaign for Peace & Justice) கோரிக்கை விடுத்துள்ளது.




கொடூரமான போர் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், போர்க்குற்றங்கள் உட்பட நீண்டகால மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட அதிகாரிகள் தொடர்ந்து தண்டனையின்மையை அனுபவித்து வருவதாக அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

சவேந்திர சில்வா போன்ற போர்க்குற்ற குற்றம் சாட்டப்பட்ட சில இலங்கையர்களுக்கு எதிராக அமெரிக்கா உலகளாவிய மெக்னிட்ஸ்கி சட்டத்தின் கீழ் தடைகளை விதித்துள்ளது என்பதை வலியுறுத்தும் குறித்த அமைப்பு, பொறுப்புக்கூறலுக்கான உலகளாவிய இயக்கத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு நீதி வழங்குவதற்கு ஆதரவளிக்கவும் பிரித்தானியாவுன்னு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

"ஐக்கிய நாடுகள் சபையால் நிறுவப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் சாட்சியங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீதியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்துகின்றன, ஆனால் சர்வதேச அழுத்தம் இல்லாமல், இந்த முயற்சிகள் தடைபடும் அபாயம் உள்ளது." என சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை பிரச்சாரம் மேலும் தெரிவிக்கின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் காவேரி கலா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஊடக பாதை செயலமர்வு சிறப்பான பலனைத் தந்துள்ளது

பு. கஜிந்தன்





காவேரி கலா மன்றம் நடாத்திய "பசுமை விழி" எனும் தொனிப்பொருளிலான ஊடக பாதை செயலமர்வு 23-11-2024 அன்றையதினம் கல்லூண்டாயில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.



இதில் வளவாளர்களாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக் கழகத்தின் வருகைதரு விரிவுரையாளரும், சுயாதீன ஊடகவியலாளரும், பால்நிலை ஆலோசகருமான கிருத்திகா தருமராஜா, மற்றும் யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்துரையை பொது சுகாதார பரிசோதகர் திரு.சூரியகுமார் வழங்கியிருந்ததுடன், தொற்றா நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்துரையை வைத்தியர் திரு.குகதாசன் வழங்கினார். நிகழ்வின் இறுதியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் காவேரி கலா மன்றத்தினர், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கடற்றொழில் அமைச்சருக்கும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கும் இடையிலான சந்திப்பு!





கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும், யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்திற்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள மீனவ சம்மேளன காரியாலயத்தில் இடம்பெற்றது.

குறித்த சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன், மீனவ சம்மேளன தலைவர் அ.மரியதாஸ், செயலாளர் சகாயராஜா சம்பந்தன், பொருளாளர் செ.சிவஞானராசா உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடந்த கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக ஆடிய ஹாட்லி மாணவர் ஆகாஷீக்கு வடக்கு ஆளுநர் வாழ்த்து!



இலங்கை 17 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து மிகச் சிறப்பான பந்துவீச்சு பெறுதியை பதிவு செய்த யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரியின் மாணவன் விக்னேஸ்வரன் ஆகாஷுக்கு வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ நா.வேதநாயகன் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்தார்.

ஆகாஷை தொலைபேசியூடாக நேற்று மாலை 25.11.2024 தொடர்புகொண்ட ஆளுநர், அவரை வாழ்த்தியதுடன் எதிர்காலத்தில் இலங்கை கிரிக்கெட் அணியில் இடம்பிடிக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து சாதனைகளைப் படைக்கவேண்டும் என்றும் ஆளுநர் ஆகாஷிடம் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆட்டத்தில் விளையாடிய ஆகாஷ், 5 இலக்குகளை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only



Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள்
Sri Lanka News



# போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவியை விற்று அரதிற்கு நிதி திரட்ட வேண்டுமா?

## பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேள்வி

- ந.லோகதயாளன்

இந்திய அரசினால் வடக்கு மாகாண விவசாயிகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் கமநல சேவைத் திணைக்களத்தினால் ஏலத்தில் விடப்பட்டு மத்திய அரசிற்கு வருமானம் காட்டுகின்றனர் என தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் ஆதங்கம் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு விவசாயிகளின் நன்மை கருதி 2012 ஆம் ஆண்டு இந்திய அரசினால் 500 உழவு இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அன்பளிப்பாக வழங்க்கப்பட்ட உழவு இயந்திரங்களை நேரடியாக விவசாயிகளிடமே வழங்குங்கள் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டபோது வடக்கில் பல ஆயிரம் விவசாயிகள் இருக்கும்போது 500 பேருக்கு மட்டும் பகிர்ந்தளிப்பது கடினம் எனவே அவற்றை கமநல சேவைத் திணைக்களத்திடம் வழங்கி அவர்கள் ஊடாக விவசாயிகளிற்கு சேவையாற்றப்படும் என அப்போதைய ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி உள்ளிட்டவர்கள் நரித் தந்திரத்தை வகுத்து தமது பிடிக்குள் கொண்டு சென்றனர்.

அதன் பின்பு அந்த உழவு இயந்திரங்கள் இரு ஆண்டுகள்கூட சேவை புரியாது பல பிரச்சணைகள் காரணமாக கமநல சேவை நிலையங்களில் தரித்து நின்றபோது அந்த உழவு இயந்திரங்களை விவசாய அமைப்புக்களிடம் வழங்குமாறு பல தடவை கோரிக்கை விடுத்தோம்.

அவ்வாறான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்ட சமயங்களில் எல்லாம் 500 உழவு இயந்திரங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பதிவிலேயே இருப்பதனால் கமநல சேவைத் திணைக்களத்தினால் பதிவு மாற்றம் செய்ய முடியவில்லை. வேண்டுமானால் வேறு அரச திணைக்களங்களிற்கே மாற்ற முடியும் என்றனர். இதன்போது ஆட்சியில் இருந்த அரசியல்வாதிகளின் செல்வாக்வின் பெயரில் சில உழவு இயந்திரங்கள் வேறு திணைக்களத்திற்கு மாற்றப்பட்டபோதும் பயன்பாடு கருதி மௌனம் காத்தோம். ஆனால் தற்போது இந்திய அன்பளிப்பு உழவு அயந்திரங்கள் எனத் தெரிவிக்காது பத்திரிகையில் விளம்பரம் செய்து ஏலத்தில் விற்கப்பட்டும் விட்டது.

இதில் உள்ள மூடு மந்திரம் என்ன என்பதனை அரசு பகிரங்கப்படுத்துவதோடு ஏலத்தின் மூலம் பெறப்பட்ட நிதி அந்த மாவட்ட விவசாயிகளிற்கு வழங்கப்பட வேண்டுத் ஏனெனில் அது இந்திய அரசு விவசாயிகளிற்கு வழங்கிய பொருளே அன்றி அரசிற்கு வழங்கப்பட்டது அல்ல என்றார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, ஏலத்தில் இடம்பெற்றவை தொடர்பில் ஆராயும் அதே நேரம் எஞ்சிய உழவு இயந்திரங்கள் விவசாய அமைப்புக்களிற்கே வழங்க ஏற்பாடு செய்ய முடியுமா என ஆராயப்படும் என்றார்.

# வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை மீள இயக்குமாறு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் கோரிக்கை



வடக்கு மாகாணத்திலுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட வடக்கு மாகாண மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத்தை (NPCODA) மீள இயக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனை கண்சத்திர சிகிச்சை நிபுணர் Dr. மலரவன், வவுனியா பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் வி.சுப்பிரமணியம் ஆகியோர் வடக்கு மாகாண ஆளுநரை 25.11.2024 அன்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, வடக்கு மாகாண சபை இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் தொடர்பான கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர். மேலும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான குவிய மையத்தை (focal point) உருவாக்குமாறும் கேட்டுக்கொண்டனர். இவற்றைச் சாதகமாக ஆராய்வதாக ஆளுநர் உறுதியளித்தார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் தொய்வின்றித் தொடரும் மரக்கன்றுகள் விநியோகம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் நொவம்பர் மாதத்தில் வடமாகாண மரநடுகை மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இதை முன்னிட்டுத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடாத்தப்படும் கார்த்திகை வாசம் மலர்க்கண்காட்சி இம்முறையும் நொவம்பர் 22ஆம் திகதி தொடங்கி 30ஆம் திகதி வரைக்கும் நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், இக்காலப்பகுதியில் புயலுடன் கூடிய மழை வடபகுதியைத் தாக்கும் என்று வானிலையாளர்கள் கடுமையாக எச்சரித்திருந்ததன் காரணமாக இக்கண்காட்சி திட்டமிட்டவாறு இடம்பெறவில்லை.

எனினும், தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் ஏற்கனவே மரக்கன்றுகள் பெற்றுக்கொள்வதற்காகப் பதிவு செய்திருந்த பொதுமக்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இறந்தவர்களை நினைவுகூரும் முகமாக மரக்கன்றுகளை நடுகை செய்யும் வழமை தமிழ் மக்களிடையே தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. இம்மாதம் வீர மறவர்களை நினைவிற்கொள்ளும் மாதம் என்பதால் சீரற்ற காலநிலையையும் பொருட்படுத்தாது ஏராளமானோர் மரக்கன்றுகளைப் பெற்றுச்செல்வதும், மரநடுகையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கை – உறுதிப்படுத்திய தமிழக மீன்பிடித்துறை!

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை தமிழக மீன்பிடித்துறை உறுதிப்படுத்தி உள்ளதாக அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என். வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

25-11-2024 ஆன்றைய தினம் யாழ்ப்பாணம் மாதகல்ப பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கிழக்கு மையம் கொண்டிருக்கின்ற சூறாவளி காரணமாக உயிராபத்து ஏற்படும் என்ற வகையில் இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடிக்க இந்திய மீனவர்கள் செல்ல வேண்டாம் என தென்னிந்திய மீன்பிடித்துறை எச்சரித்துள்ளது. இந்த எச்சரிக்கையினுடைய பொருளை பார்க்கும் பொழுது இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் வந்து மீன்பிடிப்பதை தமிழக மீன்பிடித்துறை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

நாங்கள் பல தடவைகள் இது குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறியபோது திசை மாறியும், காற்றின் அழுத்தம் காரணமாகவும் இலங்கை கடற்பரப்பினுள் இந்திய படகுகள் செல்வது இயல்பானது என்று கூறினார்கள். ஆனால் அவர்களது அறிவிப்பானது இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது உறுதிப்படுத்தியுள்ளது.

சூறாவளியில் இருந்து தமது உயிரை பாதுகாப்பதற்காகவே இலங்கை கடற்பரப்புக்குள் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவித்திருக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இலங்கையின் வடபுல மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்து பட்டினி சாவினை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையிலே இதைக் கண்டும் காணாதது போல் இருந்து எம்மீது கருணை காட்டாத தமிழக மீனவர்கள் எமது கடற்பரப்பினுள் வந்து தொடர்ந்து மீனைப் பிடிப்பது மாத்திரம் இல்லாமல் நமது வளங்களையும் அழித்துவிட்டு செல்கின்றமை வாடிக்கையான விடயம்.

எனவே சூறாவளி அனர்த்தம் காரணமாக எச்சரிக்கை விடுத்திருக்கின்ற தமிழக மீன்பிடித்துறையானது இந்திய இழுவை மடி தொழிலாளர்களை தொடர்ச்சியாக எமது கடற்பரப்பினுள் வராமல் தடுக்க வேண்டும். இது இப்படி இருந்தால் எமது இரு நட்டு மீனவர்களினது பிரச்சினைகளும் தீர்வதற்கு வழிவகுக்கும் என்றார்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள் கல்லுண்டாய் மக்களுக்கு உதவிகள்!



யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடும் மழை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கல்லுண்டாய் ஜே/135, ஜே/136, பிரிவில் வசிக்கும் 59 குடும்பங்களுக்கு ரூபா 295,000 பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டது.

அத்துடன் கல்லுண்டாய் பகுதியை சேர்ந்த தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு 45,000 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டி ஒன்றும் வழங்கிவைக்கப்பட்டது.

கல்லுண்டாய் ஐக்கிய சனசமூக நிலைய தலைவர், க.செந்தூரன் தலைமையில் சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற இவ் உதவிகள் வழங்கும் நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் உதவிகளை வழங்கிவைத்தார்.

இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்களும் கலந்துகொண்டனர்.





# அராலி சிறீமுருகன் சனசமூக நிலையத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும் தலைவரின் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வும்!



மண்ணுக்காக தமது உயிரை அர்ப்பணித்த மாவீரர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை கௌரவப்படுத்தும் நிகழ்வு 26ம் திகதி அன்றையதினம் அராலி சிறீமுருகன் சனசமூக நிலையத்தின் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில், தமது இன்னுயிர்களை தியாகம் செய்தவர்களுக்கு இரண்டு நிமிட அக வணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூன்று பிள்ளைகளை மண்ணுக்காக கொடுத்த குணராசா கமலாதேவி பொதுச் சுடரினை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் ஈகைச்சுடர்களை ஏற்றி வைத்தனர். பின்னர் உயிர்நீத்த உறவுகளது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்கு நினைவுச் சின்னமாக தென்னங்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. இறுதியாக விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70வது பிறந்தநாளானது கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், தமிழரசுக் கட்சியின் முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் சேனாதிராஜா கலையமுதன், மாவீரர்களின் பெற்றோர், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.





# அநுர அரசாங்கத்தின் கெடுபிடிகள் இல்லாததால் சாத்தியமான வல்வெட்டித்துறைப் பெருவிழா



## தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த தினம் 26ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் விமர்சையாக கொண்டாடப்பெற்றது

**- யாழ்ப்பாணத்திலிருந்து லோகதயாளன்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. இராணுவம் மற்றும் பொலிஸாரின் கெடுபிடிகள் அற்ற நிலையில் இந்தக் கொண்டாட்டம் சாத்தியமானது என மக்களால் பேசப்பெற்றது.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவிஜிலிங்கம் மற்றும் ஊர் மக்கள் ஒன்று திரண்டு வே.பிரபாகரன் அவர்களுக்கு கேக் வெட்டியும், இனிப்பு மற்றும் மரக் கண்டுகள் வழங்கியும் எழுச்சியான முறையில் இப் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பெற்றன.

அவருடைய பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக வல்வெட்டித்துறை வே.பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படத்தினை கொண்ட பதாகை ஒன்றும் அச்சிடப்பட்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் போது அங்கு வந்திருந்த வல்வெட்டித்துறை பொலிஸார் வே.பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடைய புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்று தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் அந்த புகைப்படத்தினை நீக்கிவிட்டு உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப பிறந்தநான் கொண்டாட்ட நிகழ்விவுகளை நடத்துங்கள் என்று பொது மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அக் கோரிக்கையினை ஏற்ற மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் படத்தினை அகற்றிவிட்டு சிறப்பான முறையில் அவரின் பிறந்த நாள் நிகழ்வு நடத்தப்பட்டது.





மேலும் இந் நிகழ்வின் சிறப்பம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினத்தை பிரதிபலிக்கும் வகையில் அவருடைய வீடு வளாகத்திற்குள் சிறுவர்கள் மற்றும் பொது மக்களால் 70 மரங்கள் நாட்டப்பட்டன.

இது மட்டுமல்லாமல் 70 மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள், 70 தென்னை மரக் கன்றுகள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசின் போர்குற்றம் விவகாரம்: சீனா சர்வதேச நீதியை தடுக்கிறது

## வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் லீலாதேவி குற்றச்சாட்டு!

வடக்கு கிழக்கில் இறுதி யுத்தின் போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது என உறவுகள் ஏங்கி கொண்டிருக்கும் நிலையில் அதற்கான சர்வதேச நீதியைப் பெறுவதற்கு சீனா தடையாக அமைவதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜா குற்றஞ்சாட்டினார்.

அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு வருகை தந்த சீன தூதுவர் தமிழ்மக்களின் தீர்வு மற்றும் காணாமாலாக்கப்பட்டோர் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீனதூதுவர் வழங்கிய பதில் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உண்மையாகவே சீனதூதுவரின் வருகையின்போது அவரால் தெரிவிக்கப்பெற்ற கருத்திற்கு முற்றாக எதிர்ப்பை தெரிவிக்கின்றேன்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்கு கிடைத்தது உண்மை. ஏற்கனவே முன்பிருந்த அரச சார்பான கட்சிக்கு வீழ்ந்தவை தான் இப்பொழுது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ளது.

மேலும் இந்த அனுரகுமார அரசாங்கத்தினை முற்று முழுதாக ஏற்றுகொண்டு வாக்களித்தது என்றும் கூறமுடியாது.

இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் வெறுப்பும் அங்கே வாக்காக விழுந்துள்ளது. அதனை விட வழக்கமாக இங்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்து கொண்ட வாக்கை விட அதிகளவு வாக்கினை பெற்றுள்ளார்கள்.




ஆடு அழுகின்றது என ஓநாய் வெம்பி அழுத கதை தான் சீனதூதுவரின் கதை மீது எனக்கு வருகின்றது.

உண்மையாகவே இந்த காணாமலாக்கப்பட்டவரின் பிரச்சினைக்கு எப்பொழுதோ தீர்வு கிடைத்திருக்கும்.

கடந்த அரசாங்கங்கள் இருக்கின்ற பொழுது அதனை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொடுப்பதற்கு பல நாடுகள் தயாராக இருந்தும் சீனாக்கு அங்குள்ள வீற்றோ பவர் காரணமாக தான் இந்த விடயம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டுபோகபடவில்லை. ஏன் என்றால் வெளிப்படையாகவே சொல்லுகின்றார்கள் காணாமலாக்கப்பட்டவரின் பிரச்சினையை கொண்டு சென்றால் சீனா இலங்கைக்கு ஆதரவாக வீற்றோ அதிகாரத்தை பாவிக்கும் என்கின்றார்கள்.

அதே போல இறுதி கட்ட யுத்தத்தின் பொழுதும் சீனா பொஸ்பரஸ் குண்டுகளை கொடுத்து தமிழ் மக்களை கொல்வதற்கு முக்கால்வாசி அவர்கள் தான் பொறுப்பாளிகள். யுத்தம் முடிவடைந்து தீர்வு காலத்துக்கு காலம் வரும் முட்டு கொடுத்து தங்கள் நலனை தக்க வைப்பதற்காக தங்கள் சுயலாபத்தினை பெறுவதற்கும் தமிழ்மக்களை வஞ்சித்து கொண்ட இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகளின், உற்பத்தி கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்வு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (22-11-2024)

மன்னார் கரிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில். "நாமும் சாதனையாளர்களே" என்னும் கருப்பொருளில், மாற்றுத்திறனாளிகளின் உற்பத்திக் கண்காட்சி மற்றும், நிகழ்வுகள் 22ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை, காலை 9.30 மணியிலிருந்து, மாலை 4 மணிவரை, மன்னார், நகரமண்டபத்தில் நடைபெற்றது.

வாழ்வுதய இயக்குனர் அருட்பணி அருள்ராஜ் குரூஸ் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாற்றுத் திறனாளிகளின் நிகழ்வுகள் மற்றும் பொருட்கள் கண்காட்சியும் இடம்பெற்றது.

மன்னார் கரிற்றாஸ் வாழ்வுதய நிறுவனத்துடன் இணைந்து, கரிற்றாஸ் கியூடெக் வன்னி, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து வந்திருந்த மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளின் கைவண்ணங்களும் இங்கே காட்சிப்படுத்தப் பட்டதுடன் அவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

அத்துடன் சிறு கைத்தொழில் மேற்கொள்ளும் பெண்களின். தயாரிப்புகளும் சந்தைப் படுத்தப் பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில், மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் கிறிஸ்து நாயகம் அடிகளார், மன்னார் கரிற்றாஸ், வாழ்வுதயத்தின் இயக்குனர், மற்றும். பணியாளர்கள் கலந்து கொண்டதோடு, பொதுமக்களும் கலந்து கொண்டனர்.





- எஸ்.ஆர்.லெம்பேட் (24-11-2024)

# மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு நாங்கள் தொடர்ந்தும் பயணிப்பதா?

## மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன் கேள்வி

மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்து கொண்டு நாங்கள் தொடர்ந்தும் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? என்பது குறித்து கட்சியின் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியுள்ளது என மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தெரிவித்தார்.

பாராளுமன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ரெலோ கட்சிக்காக பல்வேறு வகையிலும் உதவி புரிந்த கட்சியின் உறுப்பினர்களுடன் சந்திப்பும் மற்றும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு 24-11-2024 அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இதன் போது தலைமை தாங்கி உரையாற்றுகையிலே மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும்,பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது கட்சியின் தலைமைத்துவத்திற்கு எவ்வித பாதிப்புகளும் இன்றி மீண்டும் பாராளுமன்றம் அனுப்ப பல வழிகளிலும் உதவி புரிந்த தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர்களுக்கு தலைவர் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்டது. அந்த 5 கட்சிகளில் 4 கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர்.தமிழீழ விடுதலை இயக்கம் மட்டும் இத் தேர்தலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை பெற்றுக் கொண்டுள்ளது.

மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு நாங்கள் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? போன்ற விடயங்கள் குறித்து ஆலோசனைகளை உங்களிடம் முன் வைக்கின்றோம்.

நாங்கள் எதை நினைத்தாலும் மக்கள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளனர். ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்து பலத்துடன் போட்டி யிடுகின்றோம் என நாங்கள் நினைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

மக்கள் எமது கூட்டிற்கு ஆதரவு வழங்குவார்கள். நாங்கள் தான் ஒற்றுமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ஐந்து போராட்ட குழுக்கள் ஒன்றாக நிற்கின்றோம், நாங்கள் கடந்த காலங்களில் மக்களுக்காக ஆயுதம் ஏந்தி போராடியவர்கள். எனவே எங்களுக்குத்தான் மக்களின் ஆதரவு இருக்கிறது என்று நாங்கள் எண்ணி இருந்தோம்.

அந்த எண்ணத்தில் மண்ணை போடுவது போல இலங்கை தமிழரசு கட்சி எவ்வாறு எம்மை விட்டு வெளியே சென்றார்களோ அவர்கள் நினைத்தது நடந்து விட்டது.

நாங்கள் தவறானவர்களாகவும், அவர்கள் சரியான வர்களாகவும் காண்பித்து இத் தேர்தலில் வடக்கு கிழக்கில் அவர்கள் 8 ஆசனத்தை பெற்றுள்ளனர்.

உண்மையில் இது எமது அரசியல் இருப்பிற்கு ஒரு கேள்விக்குறியாகி உள்ளது. எனவே இனி வருகின்ற தேர்தல்களில் நாங்கள் தோற்போமாக இருந்தால் எமது கட்சியின் நிலை கேள்விக்குறியாகிவிடும்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலை இயக்கம் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. எனவே உங்களின் ஒத்துழைப்பை நாங்கள் தொடர்ந்தும் எதிர் பார்க்கிறோம்.எமது கட்சியின் உறுப்பினர்களை நம்பியே நாங்கள் அரசியலை முன்னெடுக்க உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இத்தேர்தலில் தனது வெற்றிக்காக பாடுபட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவித்ததோடு, கட்சி எதிர் காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடினர்.

# மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்கவும்

## ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க வுக்கு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.அவசர கடிதம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (26-11-2024)

மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் காணப்படும் பொது மக்களுக்கு சொந்தமான காணிகளை மீள கையளிக்க கோரி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் 26ம் திகதி அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மாவட்டத்தில் உள்ள முள்ளிக்குளம், தலைமன்னார் பியர் பள்ளிமுனை, வங்காலை ஆகிய கிராமங்களில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகள் இன்னும் அவர்களிடம் இருந்து மக்களுக்கு கை அளிக்க முடியாத நிலையில் உள்ளன.

குறிப்பாக முள்ளிக் குளத்திலுள்ள மக்களின் விளை நிலங்கள் மற்றும் குடியிருப்புக் காணிகள், தலைமன்னார் பியரில் உள்ள சத சகாய அன்னையின் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு சொந்தமான காணிகள், வங்காலை நானாட்டான் வீதியின் ஓரத்தில் உள்ள தனிநபர்களின் காணிகள் மற்றும் பள்ளி முனையில் குடியிருப்புக் காணிகள் ஆகியவை விடுவிக்கப்படாமல் உள்ளது.

முள்ளிக்குளத்தில் 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் திகதி இக் கிராமத்தில் இருந்து இம்மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

2016 ஆம் ஆண்டு 100 ஏக்கர் விடுவிக்கப்பட்டது. மேலும் 900 ஏக்கர் (04 குளங்கள் கொண்ட விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு நிலங்கள் உட்பட) விடுவிக்கப்படாமல் உள்ளது.

வடமேற்கு கடற்படை தலைமையகம் இந்தப் பகுதிக்குள் நிறுவி இருப்பதால் அவர்கள் விடுவிக்க முடியாத நிலையில் உள்ளனர். தலைமன்னார் பியர் சதா சகாய அன்னையின் ஆலயம் மற்றும் தேவாலயத்தைச் சுற்றியுள்ள நிலமும் படையினர் வசம் உள்ளது.

இந்த நிலமும், தேவாலயம் மன்னார் மறை மாவட்டத்திற்கு மறைமாவட்ட ஆயருக்கும் மக்களுக்கு சொந்தமானது.

சுமார் 10 ஏக்கர் நிலம் வடமத்திய கடற்படை கட்டளைத் தலைமையகம் இதற்குள் நிறுவப்பட்டுள்ளது. இந்த கிராமத்தில் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் ஞாயிறு வழிபாடுகள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பள்ளிமுனை கடற்படை முகாம் அமைக்கப்பட்ட பகுதி மக்களின் குடியிருப்பு பகுதிகளுக்கு சொந்தமான காணியாகும். கடற்படையினர் 2005 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பகுதியில் முகாமிட்டு வசித்து வருகின்றனர்.

வங்காலை நானாட்டான் வீதியில் கடற்படை முகாம் அமைந்துள்ளது. இந்த நிலம் ஒரு தனி நபருக்கு சொந்தமானது.

எனவே மன்னார் மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள மக்களின் காணிகளை விடுவித்து மக்கள் தமது சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழ வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். என குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# 2009 இற்குப் பின்னரான பதினாறாவது மாவீரர் நாள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

“அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் தான்” என்று மிலன் குந்ரோ கூறுவார். மறதிக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டத்தை அதாவது நினைவு கூர்தலை, தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் முன்னெடுக்க வேண்டும்.

முதலாவதாக, தமிழ் மக்களின் தேசிய இருப்பை அழிக்க முயற்சிக்கும் ஒடுக்கு முறையின் வரலாற்றையும் அந்த ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றையும் மறந்து விடாமல் இருப்பது. கூட்டுத் துக்கத்தை, கூட்டு இழப்பை கூட்டுத் தோல்வியை, நினைவு கூர்வதன் மூலம்தான் அரசற்ற ஒரு மக்கள் கூட்டம் அக்கூட்டுத் துக்கத்தை கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றலாம். நினைவு கூர்தல் என்பது நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி. கூட்டு நினைவுகளை, கூட்டு இழப்பை, கூட்டுத் துக்கத்தை கூட்டுக் காயத்தை, கூட்டு மன வடுக்களை கூட்டு அவமானத்தை, அரசியல் ஆக்க சக்தியாக மாற்றினால் அது நீதிக்கான போராட்டத்தின் உந்து விசையாக மாறும். அதனால்தான் தமிழ் மக்கள் நினைவுகளை உயிர்ப்புடன் பேணக்கூடாது என்பதற்காக அரசாங்கம் தடைகளை விதிக்கின்றது. இம்முறை கொட்டு மழை, புயல் வீசும் என்ற பயம், வெள்ளப் பெருக்கு, அரசங்கம் அறிவித்த தடை என்பவற்றை மீறி மக்கள் துயிலும் இல்லங்களை நோக்கிக் குவிந்தார்கள்.

தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் சின்னங்கள், கொடிகள் போன்ற விடயங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருந்த போதிலும் ஆங்காங்கே தமிழ் நகரங்களில் மாவீரர் பாடல்கள் பகிரங்கமாக ஒலித்தன. எந்த நினைவுகளை அரசாங்கம், அதாவது அதிகாரம் தடை செய்ததோ, அந்தத் தடையைமீறி அந்த நினைவுகள் அனுஷ்டிக்கப்பட்டன. அதாவது அரசாங்கம் எதைத் தமிழ் மக்கள் மறக்க வேண்டும் என்று சிந்திக்கின்றதோ அதை தமிழ் மக்கள் மறக்கவில்லை. அந்தத் தளத்தில் மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டத்தை தமிழ் மக்கள் கடந்த 15 ஆண்டுகளாக முன்னெடுத்து வருகிறார்கள்.

இரண்டாவது தளத்தில், தமிழ் மக்கள் தமது சமூகத்துக்குள்ளேயே மறதிக்கு எதிராக, அல்லது திட்டமிட்டு தெரிவு செய்யப்பட்ட மறதிக்கு எதிராக அல்லது மந்தத்தனத்துக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. ஏனென்றால் மறதிதான் பெரும்பாலான தொழில்சார் அரசியல்வாதிகளின் அடிப்படைப் பலமாக இருக்கிறது. மக்களுடைய மறதி. வாக்காளர்களுடைய மறதி.

கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் அரசியல்வாதிகள் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்களின் மறதியை நம்பித்தான் அரசியல் செய்கிறார்கள். ஒரு தேர்தலில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் மறந்து விடுவார்கள் என்று அவர்கள் திட்டவட்டமாக நம்புகிறார்கள். ஏன் அதிகம் சொல்வான்? அரசியல்வாதிகளுக்கே தாங்கள் வழங்கிய வாக்குறுதி என்ன என்பது மறந்து விடுகிறது. மிதவாத தமிழரசியலைப் பொறுத்தவரை மறதி தான் மிகப்பெரிய முதலீடு.

“நீங்கள் கடந்த தேர்தலில் இப்படி எல்லாம் வாக்களித்தீர்கள். உங்களுடைய வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை?” என்று யாராவது ஞாபக சக்தி உள்ள ஒரு வாக்காளர் கேட்டால், தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் முழுப் பழியையும் சிங்கள பேரினவாதத்தின் மீது போடுவார்கள். இனவாதம் தங்களைச் செயற்பட விடுவதில்லை. எங்களுக்கு சக்தி இல்லை. எங்களுக்கு மேலும் பலத்தைத் தாருங்கள். எங்களை இந்த தேர்தலில் வெற்றி பெறச் செய்யுங்கள். நாங்கள் சொன்னதைச் செய்கிறோம் என்று சொல்லுவார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக யாருமே சொன்னதைச் செய்யவில்லை.

தமிழ் மக்கள் பலவற்றை மறந்து விட்டார்கள். 2009க்கு முன்பு தமிழரசியல் என்பது தியாகம் செய்வதாக, அர்ப்பணிப்புகள் மிகுந்ததாக, வீரம் நிறைந்ததாகக் காணப்பட்டது. அங்கே அரசியலில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதி தியாகத்துக்குத் தயாராக இருப்பது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக ஒரு அரசியல்வாதிக்குரிய அடிப்படைத் தகுதி பிழைக்கத் தெரிந்திருப்பது. தன்னுடைய பதவிக்காலத்தில் எப்படி உழைப்பது? சொத்துச் சேகரிப்பது? என்பதுதான்.

தமிழரசு கட்சிதான் தமிழ் மக்களின் மறதியின் மீது அதிகம் வெற்றிகளைப் பெற்ற ஒரு கட்சி. சம்பந்தர் தன்னுடைய பெருநாள் செய்திகளில் எப்படி எப்படியெல்லாம் வாக்குறுதிகளை வழங்குவார்? சுயாதீன திருச்சபைகளின் போதகர்கள் அருள்வாக்கு கூறுவது போல ஒவ்வொரு பண்டிகை நாளின் போதும் சம்பந்தர் தனது வாழ்த்துச் செய்தியில் பொய்யான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருந்தார். ஆனால் தமிழ் மக்கள் அவற்றையெல்லாம் மறந்து இந்த முறை தமிழரசுக் கட்சிக்கே அதிகம் ஆசனங்களை கொடுத்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களை ஏமாற்றி வருகிறது என்பதனை அடிக்கடி நினைவூட்டுவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். தமிழரசுக் கட்சியும் உட்பட ஏனைய கட்சிகளின் உருட்டல்களையும் புரட்டல்களையும் சுட்டிக் காட்டுவதும், தமிழ் மக்கள் அவற்றை மறந்து விடாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்வதும் முன்னணிதான்.

அதேசமயம் தன்னை ஆயுதப் போராட்டத்தின் நேரடி வாரிசு போல முன்னணி காட்டிக் கொள்கிறது. ஏனைய எல்லா கட்சிகளையும் விட சாகத் தயாரான கட்சி நாங்கள் மட்டும்தான் என்று முன்னணி கூறுகிறது. கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் அவ்வாறு பேசியிருக்கிறார். ஆனால் இங்கே பிரச்சனை என்னவென்றால் தமிழ் தேசிய கட்சிகளில் எது சாகத் தயாரானது என்பதனை யாராவது உயிர் தியாகம் செய்துதான் நிரூபிக்கலாம். முன்னணியில் இதுவரை யாரும் தங்கள் உயிர்களைத் துறந்து போராடியிருக்கவில்லை. ஏனைய கட்சிகளிடமிருந்து தங்களை வேறுபடுத்தி காட்டுவதற்காக அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள். தமிழ்த் தேசிய அரசியல் எனப்படுவது சாகத் துணிந்தவர்களுக்குத்தான் என்ற ஒரு நிலைமை 2009க்கு முன் இருந்தது. தமிழ் மக்கள் அதை மறந்து விட்டார்கள் என்று முன்னணி நம்புகின்றதா?

எல்லா நினைவு நாட்களும் மறதிக்கு எதிரானவைதான். ஒவ்வொரு நினைவு நாளின்போதும் தமிழ் மக்கள் நினைவிடங்களில் அல்லது துயிலுமில்லங்களில் கூடுகிறார்கள். அங்கு விளக்கு ஏற்றுகிறார்கள். அழுகிறார்கள். ஆனால் அந்தக் கண்ணீரெல்லாம் எங்கே சென்று சேர்கிறது? அதன் விளைவை யார் வாக்குகளாக அறுவடை செய்வது?

தியாகிகளை நினைவு கூர்வது என்பது அந்த தியாகிகளோடு களத்தில் நின்று தமது கல்வியைத் தியாகம் செய்து, தமது எதிர்கால வாழ்வைத் தியாகம் செய்து, உறுப்புகளைத் தியாகம் செய்து, உறவுகளைத் தியாகம் செய்து, இளமையைத் தியாகம் செய்து, ஆசா பாசங்களைத் தியாகம் செய்து, ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தபின் புனர்வாழ்வு பெற்று, இன்று இலங்கைத் தீவில் அதிகம் ஆபத்துக்குள்ளாகக் கூடிய ஒரு தரப்பாக காணப்படும் முன்னாள் இயக்கத்தவர்களையும் மறந்து விடாமல் இருப்பதுதான். அவர்களின் பலர் இப்பொழுதும் வறுமையில் வாடுகிறார்கள். அவர்களின் பலர் இப்பொழுதும் பிறர் உதவியில் தங்கியிருக்கிறார்கள். அவர்களின் சிலர் அண்மையில் நடந்த தேர்தலில் போட்டியிட்டார்கள். அவர்களுக்கு ஆயுதப் போராட்டம் தெரிந்திருக்கிறது. நிர்வாகம் தெரிந்திருக்கிறது. ஆனால் தேர்தல் அரசியலில் கள்ளச் சூத்திரங்கள் தெரிந்திருக்கவில்லை. ஆனால் யாருமே வெற்றி பெறவில்லை.

அப்படித்தான் துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்ற முண்டியடிக்கும் ஒவ்வொரு அரசியல்வாதியும் அங்கே உறங்கிக் கொண்டிருக்கும் தியாகிகளின் வீடுகளில் அடுப்பெரிகிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தமது கடமையை மறந்து விடாமல் இருக்க வேண்டும். அதாவது தியாகிகளை நினைவு கூர்வது என்பது அவர்களுடைய தியாகத்தால் எந்தக் குடும்பத்தில் வெற்றிடம் ஏற்பட்டதோ, அது எந்த குடும்பத்திற்கு தனிப்பட்ட பேரிழப்பாக மாறியதோ, அந்தக குடும்பத்தை மறந்துவிடாமல் இருப்பதுதான். அந்த குடும்பத்தைப் பாதுகாப்பதுதான். தியாகிகளின் விதவை மனைவியர் இப்பொழுது என்ன செய்கிறார்கள்? தியாகிகளின் பிள்ளைகளை யார் பராமரிக்கிறார்கள்? போன்ற விடயங்களையும் மறந்துவிடாமல் இருக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்காக போராடப் போய் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும், கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்களையும், எங்கே இருக்கிறார்கள் என்பது தெரியாமலேயே தொலைந்து போனவர்களையும் மறந்துவிடாமல் இருக்க வேண்டும்.

எனவே நினைவு கூர்தல் என்பது அதாவது மறதிக்கு எதிரான போராட்டம் அல்லது அதிகாரத்துக்கு எதிரான போராட்டம் என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை நினைவு கூர்வது மட்டுமல்ல. அதற்குமப்பால் ஆழமான பொருளில், அது இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்வது. மகத்தான தியாகங்களும் மகத்தான வீரமும் எங்கே தோற்கடிக்கப்பட்டன? எதனால் தோற்கடிக்கப்பட்டன? என்பதைக் கற்றுக் கொள்வது. காயங்களில் இருந்து, கூட்டு மனவடுக்களில் இருந்து, கூட்டுத் துக்கத்திலிருந்து கற்றுக் கொள்வது. கூட்டுத் துக்கத்தை ஆக்க சக்தியாக மாற்றுவது. கூட்டுக் கோபத்தை ஆக்க சக்தியாக மாற்றுவது.



கனடிய செய்திகள் Canadian News

# A Long Standing Tamil Community Activist Shean Sinnarajah is seeking Nomination as Conservative Candidate in upcoming Federal Election for Pickering-Brooklin

## நீண்ட கால தமிழர் சமூகச் செயற்பாட்டாளர் சியான் சின்னராஜா கனடிய பொதுத் தேர்தலில் Pickering-Brooklin தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஆவதற்கு விருப்பம் கொண்டு களத்தில் இறங்கியுள்ளார்





கனடாவில் நீண்ட கால தமிழர் சமூகச் செயற்பாட்டாளர் சியான் சின்னராஜா கனடிய பொதுத் தேர்தலில் Pickering-Brooklin தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஆவதற்கு விருப்பம் கொண்டு களத்தில் இறங்கியுள்ளார்.

அரசியலில் ஆர்வம் கொண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடியப் பிரிவில் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று மக்கள் தொண்டாற்றினார்.

அத்துடன் நீண்ட காலமான வர்த்தகத் துறையில் ஒரு வீடு விற்பனை முகவராகப் பணியாற்றிப் பல வாடிக்கையாளர்களைக் கொண்டவராகவும் விளங்குகின்றார்.

தற்போது Pickering-Brooklin மத்திய தேர்தல் தொகுதிக்கான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளராக வருவதற்கான ஆயத்தங்களையும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டு தன்னைத் தயார்படுத்தி வருகின்றார்.

அன்னாரது நோக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக சில நாட்களுக்கு முன்னர் பிக்கரிங் நகரில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்ற அறிமுக நிகழ்வொன்றில் தமிழ் பேசும் அன்பர்கள் பலரும் வேற்று இனங்களைச் சார்ந்த அவரது நண்பர்களும் ஆதரவாளர்களும் அங்கு சமூகமளித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

இந்த Pickering-Brooklin மத்திய தேர்தல் தொகுதியானது தமிழ் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவதற்குரிய சந்தர்ப்பம் காணப்படுவதாகவும் அந்த வகையில் அடுத்து வரும் கனடாவின் பொதுத் தேர்தலில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி ஆட்சியமைக்கும் வாய்ப்பு அதிகம் காணப்படுவதால் அங்கு மக்கள் ஆதரவு கொண்ட வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டால் அந்த வாய்ப்பு தமிழர் ஒருவருக்கு



கிட்டும் என்றும் மேற்படி அறிமுக நிகழ்வில் பல தமிழ் அன்பர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

அந்த வகையில் நண்பர் சியான் சின்னராஜா இந்த வேட்பாளரைத் தெரிவு செய்யும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மேற்படி Pickering-Brooklin தொகுதியில் வாழும் அனைத்து தமிழ் பேசும் அன்பர்களும் ஒன்றாக இணைந்து அவருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




**Arjune - Local Journalism Initiative Reporter**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தற்போதைய வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட யாழ் மாவட்ட மக்களுக்கு உதவி வழங்க முன்வருவோருக்கான பொறிமுறை உருவாக்கம்!

தற்போதைய வெள்ள அனர்த்தம் தொடர்பான கந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 27-11-2024 அன்றைய தினம் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்ட செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் அவர்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ள மக்களுக்கு உதவி வழங்க முன்வரும் தனியார் தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் உரிய பிரதேச செயலகங்கள் ஊடாக உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டதுடன், இதற்காக பிரதேச செயலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவர் பொறுப்பில் உதவிப் பொருட்கள் உரிய நபருக்கு உரிய நேரத்தில் வழக்கப்படடும் என்பதனை பிரதேச செயலாளர்கள் உறுதிப்படுத்திக்கொள்வதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்டச் செயலகத்திலும் இதற்கான தனி அலகு உருவாக்கப்பட்டுள்ளதாகவும், உணவு அல்லது உணவு அல்லாத பொருட்களை வழங்கலாம் எனவும் குறிப்பிட்டதுடன், மாவட்டச் செயலகத்தில் பிரதம கணக்காளர் பொறுப்பாகவிருந்து வழங்கப்பட்ட உதவிப் பொருட்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க



நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வெளிப்படைத் தன்மையுடன் உரிய உதவிப் பொருட்கள் பிரதேச செயலகங்களாலும், மாவட்டச் செயலகத்தாலும் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து உரிய அறிவுறுத்தல்களை அரசாங்க அதிபர் வழங்கினார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதம கணக்காளர், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# வடக்கில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக 15 ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 577 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர்கள் அறிக்கையிட்டுள்ளனர்

**- ந.லோகதயாளன்**

வடக்கில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக 15 ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 577 பேர் பாதிப்படைந்துள்ளதாக மாவட்ட அரச அதிபர்கள் அணரத்த முகாதைத்துவப் பிரிவிற்கு அறிக்கையிட்டுள்ளனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 40 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 436 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதோடு பலர் இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதோடு 34 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 536 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 861 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதோடு பேர் இடைத் தங்கல் முகாம்களில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 175 பேர் இடைத் தங்கள் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் ஒரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 135 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் 442 பாதிப்படைந்துள்ளதோடு பேர் இடைத் தங்கல் 50 குடும்பத்தைச் சேர்ந்த 153 பேர் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 12 ஆயிரத்து 629 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 910 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதோடு 459 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 547 பேர் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடயாழ்ப்பாணம அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதேநேரம் வவுனியா 87 மாவட்டத்தில் குடும்பங்களைச் சேர்ந்த 324 அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளதோடு பேர் இடைத் தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும் அதேநேரம் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமையவே வடக்கில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக 15 ஆயிரத்து 427 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 577 பேர் பாதிப்படைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

உலக செய்திகள்
World News

# பிரித்தானியா இலண்டனில் முருகதாசன் கல்லறையில் மாவீரர்களுக்கு அஞ்சலி!





மண்மீதும், மக்கள் மீதும் பற்றுக்கொண்டு தமிழீழ கனவோடு தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை நினைவு கொள்ளும் புனித நாளான (November 27) பிரித்தானியத் தலைநகர் லண்டனில் அமைந்துள்ள ஈகைப்பேரொளி முருகதாசனின் நினைவுக் கல்லறையில் மக்கள் கூடி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

27ம் திகதியன்று காலை 10:00 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்தின பாடல் ஒலிக்கவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களை நினைந்து அகவணக்கம் செலுத்தியதை அடுத்து ஈகைப்பேரொளி முருகதாசன் கல்லறைக்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பொதுச்சுடரினை மாவீரர் மலர் அவர்களின் சகோதரன் அவர்கள் ஏற்றிவைக்க, ஈகைச்சுடரினை முருகதாசனின் தந்தை ஏற்றிவைத்தார். மலர்மாலையினை ஈகைப்பேரொளி முருகதாசனின் தாயாரும், சகோதரியும் அணிவித்தனர்.

அதைத்தொடர்ந்து மக்கள் வரிசைக்கிரமமாக சென்று தேசப்புதல்வர்களை நெஞ்சில் நிறுத்தி மலர்தூவி, சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.



# நவாலியில் மாவீரர் "குட்டி"யின் நினைவிடத்தை சேதப்படுத்திய விசமிகள்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

நவாலி கிழக்கு, பிரசாத் சந்திக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள குட்டி என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி பரமேஸ்வரன் என்பவரது நினைவாலயம் 27ம் திகதி அன்றைய தினம் விசமிகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த 1985ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த நிலையில் அவரது நினைவாலயம் மேற்குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மாவீரர் நாளான 27ம் திகதி பி.ப 06.05 மணிக்கு குறித்த நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

எனினும் 28ம் திகதி வியாழன் அன்று காலை குறித்த பகுதி சேதப்படுத்தப்பட்டிருந்தது. இச்சம்பவத்திற்கு ஊர்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# யாழ்ப்பாண மாவட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட கூட்டம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் தலைமையில் நடைபெற்றபோது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் கலந்து கொண்டார்



- ந.லோகதயாளன்

வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட கூட்டம் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள்.

இவ் விசேட கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் ஏ.வி.எம். சம்பத் துயகொந்த கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமைகளை ஆராய்வதே இக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, மருந்துகள் இடையூறு இன்றி சீராக விநியோகிக்க திறைசேரி விசேட ஒதுக்கீடுகளை காலதாமதமின்றி ஒதுக்க வேண்டும் என ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இயற்கை அனர்த்தத்தால் அதிகளவு பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாகச் சென்று தீர்வுகள் வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். மேலும், சகல மாவட்டங்களிலும் முப்படையினர் போக்குவரத்து வசதிகளை மேற்கொண்டு வருவதாகவும், தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சையானது டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதியிலிருந்து நடாத்த பரீட்சைத் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைந்த வீடுகளுக்கான நிவாரணம் உட்பட அவ் மக்களுக்கு கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

டெங்கு நோய் மற்றும் ஏனைய தொற்றுநோய்கள் வராமல் தடுக்க வேண்டிய பொறுப்பும் உள்ளது. இயற்கை அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க நிரந்தர தீர்வானது அனைவருடனும் இணைந்து காண வேண்டும். இதற்கு முப்படையினரின் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாகவும் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது. முப்படையினர், பொலிசார் போதிய ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் துறைசார் திணைக்களத் தலைவர்களால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கருத்து தெரிவிக்கையில், தற்காலிக பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தனியார் அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தகர்கள் வழங்கி வரும் உதவிகளுக்கு நன்றியினைத் தெரிவிப்பதாகவும், பாதுகாப்பு நிலையங்களில் இல்லாமல் பாதிக்கப்பட்டு வீடுகளில் இருப்போர்கள் குறிப்பாக கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கும் உதவிகள் வழங்க ஒன்றிணைந்து நடவடிக்கைகள்மேற்கொள்வோம், பருத்தித்துறை மற்றும் வல்வெட்டித்துறையில் மின்கம்பங்கள் விழும் நிலையில் உள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வீதி பாரிய சேதமடைந்துள்ளது. துறைசார்ந்த திணைக்களங்கள் நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும். மழைகாலம் முடிவடைந்த பின்னர் கிணறுகளை சுத்தப்படுத்த படையினரின் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வெள்ள அனர்த்தம் ஏற்பட்டதற்கு சட்டத்திற்கு மாறாக கட்டப்பட்ட கட்டடங்களும் காரணம் அவற்றை அகற்ற நடவடிக்கைகளை மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் எடுக்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் வெள்ள அனர்த்தம் வராமல் இருக்க ஒன்றிணைந்து நடிவடிக்கைகள் எடுப்போம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவோருக்கு நன்றியினைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டு, முப்படைகளின் ஒத்துழைப்புக்கும் தமது நன்றியினைத் தெரிவித்தார்.

இவ் விசேட கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான வைத்திய கலாநிதி சண்முகநாதன் ஸ்ரீபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், அனர்த்த முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப்பணிப்பாளர் ரி.என். சூரியகுமார், முப்படைகளின் உயர் அதிகாரிகள், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், பிரதேச செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## பிரம்டன் தமிழ் ஒன்றியத்தின் உறுப்பினர்கள் அனனவருக்கும் ஒரு அறிவித்தல்

ஒன்றியத்தின் ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சனப தெரிவும் டிசம்பர் மாதம் எட்டாம் நாள் (12.08.2024) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியிலிருந்து 9 மணி வரை 10150 **The Gore Road Brampton Ontario L6P 0A6** இல் அமைந்துள்ள **Gore Meadows Community Center & Library Community Room #1** இல் நடைபெற உள்ளது. ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகமளிக்குமாறு ஒன்றியத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டு சந்தாதாரர்கள், பொதுக் கூட்டத்திற்கு முன்னதாகவோ அல்லது பொதுக்கூட்டத்தில் அன்று இவ்வாண்டுக்குரிய உங்களுடைய அங்கத்துவப் பணத்தை செலுத்தி, அங்கத்துவத்தை தொடருமாறு கேட்டுக் கொள்கின்றோம். குறிப்பு:- பெருமளவான மின்னஞ்சல்கள் , விநியோகிக்க முடியாமல் மீளகிடைக்கப் பெறுகின்றன, அவை சரியான மின்னஞ்சல் முகவரிகளாக அடையாளப்படுத்தப்படவில்லை. அங்கத்தவர்கள், உங்களுடைய தொடர்பிக்கத்தையும் மின்னஞ்சல் முகவரியையும் ஒன்றியத்துடன் தொடர்பு கொண்டு மீளாய்வு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆண்டு பொது கூட்டத்தில் இடைக்கால தலைவராக பொறுப்பெற்று புதிய நிர்வாக சனப தெரிவிற்கு, ஆசிரியர் தனபாலன் அவர்கள் வருகை தருவதாக உறுதிப்படுத்தியுள்ளார். நன்றி நிர்வாக சபை

**BTA phone 647 873 0732**

**E- Mail:info@bramptontamil**


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# Iravaatha Anma இறவாத ஆன்மா

soch mental health

*in collaboration with*

CENTRE FOR GRIEF & HEALING
Bereaved Families of Ontario - Halton / Peel

## Tamil Grief Support Group

**Virtual 5 Week Program**
**Weekly Wednesdays 6:00 pm to 7:15 pm EST**
**Nov 20th to Dec 18th 2024**

A healing space for community members who have lost a loved one. This is a closed group and will be facilitated in English & Tamil

இறந்த எம் உறவுகளின் நினைவில் துன்புறும் எமது இனத்துக்கான மன ஆறுதல் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்துவ குழுவாக வழங்கப்படும்



**Register | பதிவு செய்யுங்கள்**

**Email: mitherayee @sochmentalhealth.com**
**Only 10 spots. Must attend all sessions.**

**மின்னஞ்சல்: mitherayee @sochmentalhealth.com**
**10 இடங்கள் மட்டுமே. ஒவ்வொரு அமர்வுகளிலும் கலந்து கொள்ள வேண்டும்.**

### Funded/Sponsored By

BRAMPTON
THE HYBRID GROUP
AJAX | BRAMPTON CREMATORIUM & VISITATION CENTRE
BAD BOYZ NUTRITION

# "தமிழர்களைப் பொறுத்தளவில் சித்த ஆயுர்வேத வைத்தியமும் ஒரு தொழில் என்பதற்கு அப்பால் எமது பண்பாட்டின் அடையாளம்"

## அமரர் கே.ஜி.சிவானந்தசிங்கம் அவர்களின் படைப்பான "ஆரோக்கிய வாழ்வு" மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்







"இன்று எம்மால் நினைவு கூரப்படுபவரும் கொண்டாடப்படுபவருமான அமரர் கே.ஜி. சிவானந்தசிங்கம் அவர்கள் பணியாற்றிய வந்த துறையோ நீர்பாசன பொறியியல் துறையாகும். தனது தொழில் சார்ந்த காலப்பகுதியில் இலங்கையில் பல இடங்களிலும் அவர் மண்ணியல் மற்றும் நீர்பாசன விஞ்ஞானம் ஆகியவற்றில் முத்திரை பதித்திருந்தாலும். தனது தந்தையின் முழுநேரப் பணியான சித்த ஆயுர்வேத வைத்தியத்துறையில் ஆர்வம் கொண்டு தனது தந்தையிடமிருந்து அதன் நுட்பங்களையும் அவசியத்தையும் அதற்குள் அடங்கியிருக்கின்ற மனித நேயத்தையும் கற்று தான் கற்றவற்றை தனது மறைவிற்குப் பின்னால் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காக இன்று அவரது துணைவியார் ஜெயா மற்றும் அவரது புத்திரச் செல்வங்கள் ஆகியோர் இந்த நூலை வெளியிட்டு வைக்கின்றார்கள். அமரர் சிவானந்தசிங்கம் அவர்களது கனவு இவ்வாறான மருத்து குறிப்புக்கள் மற்றும் உடல் நலன் பேணும் தகவல்களை அறிந்தும் பின்பற்றியும் வந்தால் ஆரோக்கியமாக வாழலாம் என்ற அவரது உயரிய எண்ணமே இன்று ஒரு நூலாக வெளிவருகின்றது. மருத்துவ துறை சார்ந்த பலர் இங்கு வருகை தந்துள்ளார்கள். இதன் மறுபக்கத்தில் நாம் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.தமிழர்களைப் பொறுத்தளவில் சித்த ஆயுர்வேத வைத்தியமும் ஒரு தொழில் என்பதற்கு அப்பால் எமது பண்பாட்டின் அடையாளமாகும். அதை ஒரு தொழிலாகச் செய்யாமல் தான் சார்ந்த சமூகத்தின் ஆரோக்கியம் கருதி தனது வாழ்நாளை அர்ப்பணித்த ஒரு தந்தையின் மகனாகப் பிறந்த அமரர் கே.ஜி.சிவானந்தசிங்கம் அவர்களின் வாழ்வும் தமிழர் பண்பாட்டுக்கு சமாந்தரமாகவே பயணித்துள்ளது என்பதை நாம் நன்கு உணரலாம். . இந்த கௌரவம் அவரது மறைவிற்குப் பின்னராக ஒரு உயர் மரியாதை என்பதும் குறிப்பிடத்தக்கது" என்று புகழாரம் சூட்டினார்.

"ஆரோக்கிய வாழ்வு" மருத்துவ நூல் வெளியீட்டு விழாவோடு அமரர் சிவானந்தசிங்கம் அவர்களின் மறைவை நினைவு கூரும் நாளாக விளங்கிய அன்றைய நிகழ்வு கடந்த 24-11- 2024 அன்று கனடா ஸ்காபுறோ-வில் அமைந்துள்ள ஒன்றாரியோ- தமிழிசைக் கலா மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி அவர்கள் தலைமை வகித்தார்.

ஆரம்ப உரையை நண்பர் சோம. சச்சிதானந்தன் அவர்கள் நிகழ்த்தி பேச்சாளர்களை மேடைக்கு அழைத்தார்.

கலாநிதி பால சிவ.கடாட்சம். ஆசிரியர் தங்கராஜா சிவபாலு டாக்டர் போல் ஜோசப் மற்றும் ரவீந்திரன். கோ.கைலைநாதன் (கனடா-புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர்) ஆகியோரும் அங்கு உரையாற்றினார்கள்.

நினைவு கூர்தல் நிகழ்வின் இறுதியில் "ஆரோக்கிய வாழ்வு" நூலின் பிரதிகள் அங்கு கலந்து கொண்டவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றன

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.




**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




sauga LIVE




Mississauga வில் நேரடி நிகழ்ச்சிகளைக் காண தங்களுக்கான கூடுமிடம்

saugaLIVE.ca
MISSISSAUGA

# 10 ஆண்டுகள் பறந்தோடி போனதுவே
## மீண்டும் பிறப்பாயா மறையாத மாண்பினனே



# அமரர். சத்தியபவான் சத்தியசீலன்
## (பவான் 3 - 12 - 2024)

**மண்ணில்:**
**29-02-1968**


**விண்ணில்:**
**03-12-2014**

**(ஜயனார் கோவிலடி சுருவில்)**
**(முன்னாள் வீடியோ கலைஞர், தொழில்நுட்பவியலாளர்)**

பஞ்சாய் பறந்ததுவே ஆண்டுகள் பத்து
பரிதவிக்கின்றோம் பாவிகள் நாங்கள் இங்கு
போனது எங்கே என்று பேதலிக்கும் எமக்கு
நானது இங்கேதான் என்று அடிக்கடி காட்டும் உன் நிழல்
எல்லோர் நெஞ்சமதில் என்றும் நிலைத்து நின்று
எம் கண் முன்னே அடிக்கடி வந்து போகும்
இனிதாய் பெற்றெடுத்த பிள்ளைச் செல்வங்களோடு பெருவாழ்வு வாழ நினைத்தாய்
கண்ணிமைக்கும் நேரமதில் காலனுனைக் கவர்ந்து சென்ற கொடுமையை
எண்ணிக் கலங்கிட காலங்களோ நகர்ந்தது.
காத்திருப்போம் உன் சுவாசக்காற்றுடன்!

என்றும் நீ எம்முடன் வாழ்கின்றாய் என்ற நினைவுடன்
மலர் தூவி பிரார்த்திப்போம்

என்றும் உன் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்
உற்றார். உறவினர். நண்பர்கள்.






# அநுர அரசின் ஆட்சி
# “மாற்றமா, ஏமாற்றமா?”



***“ “அனைவரும் சமம்” என்ற கோஷத்தை பிரசாரப்படுத்திய அநுரகுமார அரசு 21 பேர் கொண்ட அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் எவரையும் உள்வாங்கவில்லை. அமைச்சரவையில் இரு தமிழர் என படம் காட்டப்பட்டவர்களில் இராமலிங்கம் சந்திரசேகர் மலையகத்தமிழர். அடுத்தவரான மாத்தறை தமிழ் பெண்ணான சரோஜா சாவித்ரி போல் ராஜ் தன்னை ஒரு தமிழராக, தமிழச்சியாக காண்பிக்க விரும்பாதவர். தனிச்சிங்கள கலாசாரத்தில் வாழ்பவர். அவரின் கணவர் சிங்களவரான மருத்துவர். தமிழ் ஊடகங்கள் இவரை தமிழராக பெருமைப்படுத்த முயன்றபோது தன்னை தமிழராகக் காண்பிக்க வேண்டாம் என “அன்புக் கட்டளை” இட்டவர். 29 பேர் கொண்ட பிரதியமைச்சர்களில் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழர் என ஒவ்வொருவர் மட்டுமே நியமனம் ”***

**- கே. பாலா -**

இலங்கையில் ஒரு அரசியல் “மாற்றம்” வேண்டுமென எதிர்பார்த்து ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவரான அநுரகுமார திசாநாயக்காவுக்கு 56,34,915 வாக்குகளை வழங்கி ஜனாதிபதியாக்கி பெருமைப்பட்டதுடன் அவரது கட்சி நாட்டை ஆள பாராளுமன்றத்துக்கான தேர்தலில் 68,63,186 வாக்குகள் மூலம் 159 பாராளுமன்ற ஆசனங்களை வழங்கி அழகுபார்த்த மக்களில் வழக்கம்போலவே சிறுபான்மையினத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்கள், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு புதிய திசைகாட்ட வந்த அநுரகுமார அரசால் ஏமாற்றப்படும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிலும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வர தமது சமூக கட்சிகளை புறக்கணித்து அண்ணளவாக சுமார் 10 இலட்சம் வாக்குகள் வரை தேசிய மக்கள் சக்திக்கு வழங்கிய முஸ்லிம்களே அநுரகுமார அரசிடம் மாற்றத்தை எதிர் பார்த்து பெரும் ஏமாற்றத்தை அடைந்துள்ளனர். அதேபோன்றே புதிய திசையில் பயணிக்கப்போகின்றோம் எனக்கூறி தடம் மாறி தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அண்ணளவாக 7 இலட்சம் வாக்குகள் வரை வழங்கி தமது தேசியக் கட்சிகளைப் புறக்கணித்த தமிழர்களுக்கும் அநுர அரசில் ஏமாற்றமே கிடைத்து வருகின்றது.

ஜனாதிபதியாக பதவியேற்றதும் முதலில் இடம்பெற்ற மாகாண ஆளுநர்கள் நியமனத்தில் வடக்கு மாகாணத்திற்கு தமிழ் ஆளுநரையும் மேல் மாகாணத்திற்கு முஸ்லிம் ஆளுநரையும் நியமித்த அநுரகுமார, தமிழ் அல்லது முஸ்லிம் ஆளுநர் ஒருவரையே கிழக்கு மாகாணத்திற்கு நியமிக்க வேண்டும் என்ற வலியுறுத்தல்கள் விடுக்கப்பட்ட நிலையில் கிழக்கிற்கு சிங்கள ஆளுநரை நியமித்து தமிழ், முஸ்லிம்களுக்கு முதலாவது அதிர்ச்சி கொடுத்தார்.

அப்படி இருந்தும் அநுரகுமார மீது நம்பிக்கையிழக்காத தமிழ், முஸ்லிம் மக்கள் பாராளுமன்றத்தேர்தலிலும் அநுரகுமாரவின் தேசிய மக்கள் சக்திக்கு வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர். அதிலும் வடக்குத் தமிழர்கள் வரலாற்றில் முதல் தடவையாக சிங்களக்கட்சி ஒன்றுக்கு பெரும்பான்மைப் பலத்தை கொடுத்த வரலாற்றுத் தவறை செய்தனர். அதே போன்றே கிழக்கிலும் முஸ்லிம்கள் தமது சமூகக் கட்சிகளை தோற்கடித்து தேசிய மக்கள் சக்தியை வெற்றி பெற வைத்தனர்.

இவ்வாறு தமிழ், முஸ்லிம். மக்களின் பேராதரவுடன் பாராளுமன்றத்தேர்தலில் நேரடியாக 141 ஆசனங்களையும் தேசியப்பட்டியல் மூலம் 18 ஆசனங்களையுமாக மொத்தம் 159 ஆசனங்களைப்பெற்று வரலாற்று வெற்றிபெற்ற அநுரகுமாரவின் தேசிய மக்கள்சக்தி அரசின் புதிய அமைச்சரவை அண்மையில் பதவியேற்றபோது மீண்டும் தமிழ், முஸ்லிம், மக்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டனர். ஏமாற்றப்பட்டனர். ஏளனப்படுத்தப்பட்டனர்.

அநுர அரசின் அமைச்சரவை அமைச்சர்களாக 21 பேர் நியமிக்கப்பட்ட நிலையில் இந்த அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் முற்றாக புறக்கணிக்கப்பட்டு இராமலிங்கம் சந்திரசேகர் என்ற மலையகத்தமிழர் ஒருவரும் சரோஜா சாவித்ரி போல் ராஜ் என மாத்தறைத் தமிழ் பெண் ஒருவரும் மட்டுமே சிறுபான்மையினத்தவர்கள் சார்பில் உள்வாங்கப்பட்டு அநுர அரசின் அமைச்சரவையில் இரு தமிழர்களுக்கு இடம் என்ற படம் காண்பிக்கப்பட்டது.

இதில் இராமலிங்கம் சந்திரசேகர் என்ற மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அமைப்பாளராக செயற்பட்டு வந்தது மட்டுமே அவருக்கும் வடக்கிற்கும் உள்ள தொடர்பு. அடுத்தவரான மாத்தறை தமிழ் பெண்ணான சரோஜா சாவித்ரி போல் ராஜ் தன்னை ஒரு தமிழராக, தமிழச்சியாக காண்பிக்க விரும்பாதவர். தனிச்சிங்கள கலாசாரத்தில் வாழ்பவர். அவரின் கணவர் சிங்களவரான மருத்துவர். தமிழ் ஊடகங்கள் இவரை தமிழராக பெருமைப்படுத்த முயன்றபோது தன்னை தமிழராகக் காண்பிக்க வேண்டாம் என “அன்புக் கட்டளை” இட்டவர் தான் இந்த சரோஜா சாவித்ரி போல் ராஜ்.

இவ்வாறாக தமிழர் என்ற போர்வையில் இருவர் அமைச்சர்களாக இருந்தபோதும் இலங்கை அமைச்சரவை வரலாற்றில் முதல் தடவையாக முஸ்லிம் ஒருவர் இடம்பெறாத அமைச்சரவை என்ற வரலாற்று பதிவையும் அநுர அரசு தனக்குரியதாக்கியது. முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக்கி, சிறைகளில் அடைத்து, வன்முறைகளைத்தூண்டி முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்த கோத்தபாய ராஜபக்ச அரசின் முதல் அமைச்சரவையில் கூட முஸ்லிம் ஒருவரே பிரதான அமைச்சர் பதவிக்கு நியமிக்கப்பட்ட நிலையில் கோத்தபாய அரசில் பழிவாங்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்குவோம் என முழங்கி முஸ்லிம்களின் வாக்குகளைப்பெற்று ஆட்சிக்கு வந்த அநுர குமார அரசு தனது அமைச்சரவையில் முஸ்லிம்களை ஏமாற்றியது. புறக்கணித்தது.

வடக்கில் பெரும்பான்மை வெற்றியை பெற்றுக்கொடுத்த தமிழ் மக்களுக்காக வடக்கிலிருந்து ஒரு தமிழ் பிரதிநிதியையாவது அமைச்சரவைக்கு உள்வாங்காது இனவாதம் காட்டியதால் தமிழர்களும் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை வழங்கியும் ஒரு முஸ்லிமைக் கூட அமைச்சரவையில் இணைக்காததால் முஸ்லிம்களும் அநுர அரசின் மீது விமர்சனங்களை முன்வைத்தபோது, சபாநாயகர், பிரதியமைச்சர்கள் நியமனங்களின்போது தமிழ், முஸ்லிம்களின் விமர்சனங்களுக்கு தீர்வு கிடைக்கும் என தேசிய மக்கள் சக்தியினரால் சாக்கு போக்குகள் கூறப்பட்டு வந்தன.

இந்நிலையில் சபாநாயகர் நியமனத்தில் போது பெண் ஒருவர் அல்லது முஸ்லிம் ஒருவர் சபாநாயகராக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அசோக சபுமல் ரன்வல என்பவர் நியமிக்கப்பட்டதோடு பிரதி சபாநாயகராகவே முஸ்லிமான ரிஸ்வி சாலி நியமிக்கப்பட்டார். பாராளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவராக ஒரு சிங்கள பெண்மணியே நியமிக்கப்பட்டார். இதிலும் தமிழ், முஸ்லிம்கள் ஏமாற்றப்பட்டனர்.

இதனையடுத்து அநுர அரசில் 29 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் வெளிவிவகார பிரதி அமைச்சராக அருண் ஹேமச்சந்திரா என்ற திருகோணமலைத் தமிழரும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதிஅமைச்சராக மொஹமட் முனீர் என்ற முஸ்லிமும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சராக சுந்தரலிங்கம் பிரதீப் என்ற மலையகத் தமிழரும் மட்டுமே நியமிக்கப்பட்டனர். அதாவது அடையாளத்திற்காக சிறுபான்மையினங்களிலிருந்து ஒருவர் வீதம் நியமிக்கப்பட்டனர். இதிலும் தேசிய மக்கள் சக்திக்கு 5 பிரதிநிதிகளை கொடுத்த வடக்கு மாகாணம் முற்றாக புறக்கணிக்கப்பட்டது.

இந் நியமனங்களினால் தமிழ், முஸ்லிம்களிடையில் மீண்டும் அதிருப்தியும் விமர்சனங்களும் எழுந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடியுடன் இருக்கும் ஜே.வி.பி.யின் சிறுபான்மையினங்களுக்கு எதிரான உண்மை முகம் அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துக்கள் மூலம் மீண்டும் வெளிப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியில் வெற்றி பெற்ற தமிழ், முஸ்லிம்களுக்கு அனுபவம் போதாது. அனுபவமற்றவர்களை அமைச்சர்களாக நியமிக்க முடியாது என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ள கருத்தே தமிழ், முஸ்லிம்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அநுர அரசில் நியமிக்கப்பட்டுள்ள 21 பேர் கொண்ட அமைச்சரவையில் 9 அமைச்சர்கள் தவிர ஏனையவர்களுக்கு அரசியல் அனுபவம் உள்ளதா? இவர்கள் முன்னர் எம்.பி.க்களாகவேனும் இருந்தவர்களா? அல்லது பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்ட 29 பேரில் எத்தனை பேருக்கு அரசியல் அனுபவம் உள்ளது? இவர்களில் எத்தனை பேர் முன்னர் எம்.பி.க்களாகவேனும் இருந்தவர்கள்? இவர்களின் பட்டங்கள்தான் இவர்களின் தகுதி என்றால் தமிழ், முஸ்லிம்களிலும் பலரும் அவ்வாறான பட்டங்களுடன் இருக்கின்றார்கள்தானே? அவர்களை ஏன் நியமிக்க முடியாது என்பதே தமிழ்.முஸ்லிம்களின் கேள்வி.

“அனைவரும் சமம்” என்ற கோஷத்தை பெரிதாக பிரசாரப்படுத்திய அநுரகுமார அரசு 21 பேர் கொண்ட அமைச்சரவையில் தமிழ், முஸ்லிம் எவரையும் உள்வாங்காதது, 29 பேர் கொண்ட பிரதியமைச்சர்களில் கிழக்கு தமிழர் ஒருவரையும் மாத்தறை முஸ்லிம் ஒருவரையும் மட்டும் நியமித்து தமிழ், முஸ்லிம்களின் தாயகமான வடக்கு, கிழக்கை முற்றாக புறக்கணித்தது தான் “அனைவரும் சமம்” என்ற கோஷத்தின் அர்த்தமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

அதுமட்டுமன்றி அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நிகழ்த்திய தனது அரசின் கொள்கைப் பிரகடன உரையும் தமிழ், முஸ்லிம் மக்களை குறிப்பாக தமிழ் மக்களை பெரும் ஏமாற்றமடைய வைத்துள்ளது. இன, மதவாதத்திற்கு இடமில்லை என்ற உறுதி மொழியைத் தவிர தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில், பிரசாரங்களில் வழங்கிய உறுதிமொழிகள் எதுவுமே உள்ளடக்கப்படவில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கம், தமிழர்களின் இனப்பிரச்சினையை கையாளப்போகும் விதம், அரசியல் கைதிகள் விடுவிப்பு, காணிகள் விடுவிப்பு, இராணுவ முகாம்க்கள் அகற்றம் போன்ற எந்த விடயங்கள் தொடர்பிலும் தமது அரசிடம் கொள்கை இல்லை என்பதையே ஜனாதிபதியின் உரை வெளிப்படுத்தி நின்றது.

இவ்வாறு அநுரகுமார அரசு மீது அதிருப்தியும் விசனமும் அடைந்துள்ள தமிழர்களை சிறிதளவேனும் திருப்திப்படுத்தவே பாதுகாப்புத்தரப்பினரின் கெடுபிடிகளின்றி மாவீரர் நாள் அனுஷ்டிக்க அனுமதியளிக்கப்பட்டதுடன் அமைச்சின்செயலாளர் ஒருவராக முஸ்லிம் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(தொடர்ச்சி 19 பக்கம்)

உலக செய்திகள்
World News

# பிரித்தானியாவின் இலண்டன் மாநகரில் நடைபெற்ற "இசைமணி" பட்டமளிப்பு விழா (Academy of Fine Arts - London)



அரங்கம் நிறைந்த கலாரசிகர்கள் மத்தியில் Academy of Fine Arts (London) இன் பட்டமளிப்பு விழா Alperton community school hall இல் மிக விமர்சையாக 10.11.2024 ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது. அன்றைய நிகழ்வுக்கு வைத்திய கலாநிதி க. சிவகுமாரும் துணைவியார் வைத்திய கலாநிதி சாந்தினி சிவகுமாரும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர். இப்பட்டமளிப்பு விழாவில் 35 மாணவ மாணவிகள் இசைமணி பட்டத்தினை வாய்ப்பாட்டு, வீணை வயலின், மிருதங்கம் கிய பாடங்களில் பெற்றிருந்தனர்.

1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பின் தலைமைப் பொறுப்பை அமரர் ஸ்ரீமதி சங்கீத வித்வான் சரஸ்வதி பாக்கியராஜா அவர்கள் ஏற்றிருந்தார்கள். 1991 ஆம் ஆண்டு முதலாவது பரீட்சையை நடத்திய Academy of Fine Arts (London)க்கு அவுஸ்ரேலியா நியூஸ்லாந்து ஆகிய நாடுகளிலும் கிளைகள் உள்ளன. அங்கும் மாணவர்கள் சிறப்புறக் கற்றுப் பரீட்சையில் அமர்கின்றனர். சென்னைப் பல்கலைக்கழகத்தினால் இதன் பரீட்சைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதும் சிறப்பான விடயமாகும். ஆசிரியத் தர பரீட்சை எடுத்து இசைமணிப் பட்டம் பெற்றவர்கள், தங்களது இன்னொரு பட்டப் படிப்புடன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளலாம். இத்தகவல்களை அறங்காவலர் தலைவர் கலாநிதி இ. நித்தியானந்தன் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.











பிரதம விருந்தினர் தனது உரையில், தமிழ் பாரம்பரியக்கலைகளை ஊக்குவிக்கும் நோக்கில் மாணவர்களை ஊக்குவிக்கும் இந்த அமைப்புக்குத் தன் வாழ்த்தைக் கூறியதுடம் ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராஜா முதலானவர்களின் அர்ப்பணிப்பையும் விதந்துரைத்தார். Academy of Fine Arts (London) பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தி அனுப்பும் ஆசிரியர்கள் மேடையில் அமர்ந்திருக்க மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றமை அழகாக இருந்தது. அத்துடன் அந்த ஆசிரியர்களுக்குப் பொன்னாடையும் மலர்க்கொத்தும் வழங்கிக் கௌரவித்தமை நல்ல விடயமாகும்.

அதன் பின்னர் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகள் சபையோரை இன்னொரு கலை உலகிற்குக் கூட்டிச் சென்றது.ஸ்ரீமதி சிவதாரணி சகாதேவனின் மாணவர்கள் வழங்கிய வீணை இசை, ஸ்ரீமதி பத்மினி குணசீலன் அவர்களின் மாணவிகளின் நடனம், யசோதா மித்திரதாஸ் அவர்களின் மாணவிகளின் வாய்ப்பாட்டு நிகழ்ச்சி, ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவ மாணவிகளின் வயலின் இசை, திரு. மணிபல்லவம் சாரங்கனின் மாணவர்கள் வழங்கிய வாய்ப்பாட்டு நிகழ்ச்சி, ஸ்ரீ AGA ஞானசுந்தரம் அவர்களின் மாணவர்கள் வழங்கிய வயலின் இசை, ஸ்ரீ பரமசாமி கிருபாகரனின் மாணவர்களின் மிருதங்க இசை, ஸ்ரீமதி திலகசக்தி ஆராமுதனின் மாணவர்கள் வழங்கிய வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சிகள் சபையைக் களைகட்ட வைத்தது.

பட்டமளிப்பு விழாவின் தரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நிகழ்வுகள் மிக நேர்த்தியாகவும் சபையினர் புருவம் உயர்த்தி ஆச்சரியப்படும் வகையில் கலைத்துவமிக்கதாகவும் அமைந்தமை Academy of Fine Arts (London) அமைப்பு மீதான நம்பிக்கையையும் பெருமையையும் தந்ததென்றே சொல்ல வேண்டும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் சேர்த்ததாக கூறப்படும் வடக்கு மாகாண இளைஞர்களின் பெற்றோர் ஆளுநரிடம் முறைப்பாடு!

பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி ரஷ்ய இராணுவத்தில் சேர்த்ததாக கூறப்படுவது தொடர்பில் அவர்களது பெற்றோரால் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் இன்று காலை முறைப்பாடு செய்யப்பட்டது. தமது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு ஆளுநரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

யாழ்ப்பாணம், கரவெட்டி, முள்ளியவளையைச் சேர்ந்த இளைஞர்களின் பெற்றோரே, ஆளுநர் செயலகத்தில் 26.11.2024 காலை ஆளுநரை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

பெற்றோரது கோரிக்கையை செவிமடுத்த ஆளுநர், உடனடியாக வெளிவிவகார அமைச்சின் செயலரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயத்தை தெரியப்படுத்தினார். பெற்றோர்களிடம் அவர்களது விவரங்களைப் பெற்று வெளிவிவகார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண மாவட் த்தில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கு சகல ஏற்பாடுகளும் தயார்

## விசேட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்!



பாதுகாப்ப நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்குமாறு பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நண்பர்கள் மற்றும் உறவினர்களது வீடுகளில் தங்கி இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களால் சமையலை செய்ய முடியாது என்று பிரதேச செயலர்கள் ஊடாக உறுதிப்படுத்துகின்ற பட்சத்தில் அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது பெய்துவரும் அடைமழை காரணமாக பாதிக்கப்படுகின்ற மக்களை, உயர்தர பரீட்சை நடக்கின்ற பாடசாலைகளை தவிர ஏனைய பாடசாலைகளில் தங்க வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பல தொண்டு நிறுவனங்களும் தனி நபர்களும் எங்களைத் தொடர்பு கொண்டு உதவி செய்வதற்கு முன் வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் அந்தந்த பிரதேச செயலகங்களில் ஒருமுறை ஏற்படுத்தப்பட்டு அங்கு ஒரு பொறுப்பான பதவி நிலை உத்தியோகத்தரின் தலைமையிலே, வழங்கப்படுகின்ற உணவுப்பொருட்களை அல்லது வேறு பொருட்களை சேமித்து வைத்து தேவையின் அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிடைக்கப்பெறுகின்ற பொருட்கள் என்னென்ன பிரதேச செயலர்கள் மாவட்ட செயலகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்ற நடைமுறை காணப்படுகின்றது.

அத்துடன் மேற்படி பொருட்களை மாவட்ட செயலகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற கரும பீடத்திலும் வழங்க முடியும். இவ்வாறு வழங்கப்படுகின்ற பொருட்கள் பிரதேச செயலகங்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படும். பின்னர் அது தேவை என் அடிப்படையில் மக்களுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

பாதுகாப்பு நிலையங்களுக்கு செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டால் மக்கள் தயக்கம் இன்றி அங்கு செல்ல முடியும். உங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு பிரதேச செயலகங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் தயாராக உள்ளார்கள்.

யாழ்ப்பாண மாநகர சபை, பிரதேச சபை, வடிகால் அமைப்பு சபை ஆகியோர் வெள்ளநீரை வெளியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

எதிர்வரும் காலங்களில் தொற்று நய் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. ஆகையால் நாங்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு, மக்களுடைய சுகாதாரம் சார்ந்த பாதுகாப்பு பொறிமுறையையும் சரியான முறையில் முன்னெடுக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

தற்போதைய தரவுகளின் அடிப்படையில் கடல் மட்டம் சற்று உயர்வடைந்து இருக்கின்ற காரணத்தினால் நிலப்பரப்பிலிருந்து கடலை நோக்கி செல்கின்ற வெள்ளத்தின் அளவு குறைவடைத்து அல்லது இல்லாத இருக்கின்றது. எனவே பொதுமக்கள் உங்களது பாதுகாப்பினை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இதுவரையான தரவுகளின் அடிப்படையில் 12970 குடும்பங்களைச் சேர்ந்த 43682 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று வீடுகள் முழுமையாக சேததமடைந்துள்ளன. 129 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 66 பாதுகாப்பு நிலையங்களில் 1634 குடும்பங்களைச் சேர்ந்த 5793பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்தங்கள் ஏற்பட்டால் பொதுமக்கள் 24 மணி நேரமும் 117 அல்லது 0773957894 அல்லது 0212221676 அல்லது 0212117117 என்ற தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பருவ மழை காரணமாக இடர் நிலைமை ஏற்படுமாயின் எதிர்கொள்ள வடக்கு மாகாணம் தயார் நிலையில்!

எதிர்வரும் நாட்களில் வடக்கு மாகாணத்தில் இடர் பாதிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாக துறைசார் திணைக்களத் தலைவர்கள் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களிடம் தெரிவித்தனர்.

பருவகால மழை மற்றும் இடர்தணிப்பு முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 22ம் திகதி வெள்ளிக்கிழமையன்று காலை 22.11.2024 இடம்பெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு ஆளுநர், எதிர்வரும் நாள்களில் தாழமுக்கம் ஒன்று வங்கக் கடலில் உருவாகலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதன் நகர்வுப் பாதை சரியாக இன்னமும் கணிக்கப்படவில்லையாயினும், நாம் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும்.

பருவமழை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் - செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னதாக, எமது பிரதேசத்திலுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் துப்பரவாக்கப்பட்டிருக்கவேண்டும். சில இடங்களில் வாய்க்கால்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளனர். அவற்றை சட்டரீதியாக அணுகி உடனடியாக இடித்து அகற்றுங்கள். தேவையேற்படின் பொலிஸாரின் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு திணைக்களங்களும் மற்றைய திணைக்களங்களைப் பார்த்துக்கொண்டிருக்காமல் உடனடியாக இந்தப் பணிகளை செய்யுங்கள். மேலும் பல இடங்களில் வாய்க்கால்களுக்குள், வீதிகளில் மக்கள் குப்பைகளை வீசுகின்றார்கள். அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதுதான் வழி. பல தடவைகள் விழிப்புணர்வுகளை செயற்படுத்தியும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாவிட்டால், சட்ட நடவடிக்கை ஊடாக தண்டிக்கவேண்டும், என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வெள்ள அபாய இடர் பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் இங்கு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் இடரை எதிர்கொள்வதற்கு தயாரான நிலையில் இருப்பதாக மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில், மன்னார் மாவட்ட மருத்துவமனையூடாகச் செல்லும் கால்வாய் துப்புரவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்ட மாவட்டச் செயலர், மக்கள் இடரின்போது இடம்பெயர நேரிட்டால் அவர்களை தங்க வைப்பதற்குரிய நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்வாய்கள் அனைத்தும் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார்.

நீர்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர், யாழ். மாவட்டத்தில் 6 மணி நேரத்தினுள் 130 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானமையால் திடீரென வெள்ள நிலைமை ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தின் உப்பாறு மற்றும் தொண்டமனாறு நன்நீரேரிகளினதும், வழுக்கையாறினதும் வெள்ள நீரை கடலுக்கு வெளியேற்றும் தடுப்பணை கதவுகள் இம்முறை முன்னதாகவே திறக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் நாள்களில் கடும் மழை எதிர்பார்க்கப்படும் நிலையில் அதைக் கருத்தில் கொண்டு அவை திறக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 18.3 அடியாக உள்ளது. 350 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவானால் 30 அடி வரையில் நீர் மட்டம் உயர்வடையக்கூடும். இருப்பினும் நீர் வெளியேற்றும் பிரதேசத்துக்கு வாய்க்கால்களை அண்மித்து உள்ளவர்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது என்று குறிப்பிட்டார்.

இடர்நிலைமை ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இரவிலும் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி குறிப்பிட்டார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான வீதிகளை ஒட்டி மக்கள் வீட்டு மதில்களை அமைத்திருப்பதன் காரணமாக, வெள்ளநீர் வழிந்தோடக்கூடிய வழிமுறைகளை உருவாக்க முடியாமல் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக வீடுகள் மற்றும் மதில்கள் அமைப்பதற்கான அனுமதியைப் பெற்ற பின்னர் அதற்கு முரணாக அவற்றை அமைப்பதால் இந்த நிலைமை ஏற்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. எனவே அனுமதியை வழங்குவதுடன் மாத்திரமில்லாது, அவற்றை தொடர் கண்காணிப்புக்கும் உட்படுத்த வேண்டும் என கௌரவ ஆளுநர் அறிவுறுத்தினார்.

கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் இங்கு குறிப்பிட்டார்.

இடர்நிலைமையின் போது தீவகத்திலுள்ள நோயாளர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான உதவிகளை கடற்படையினர் மேற்கொள்ளவேண்டும் எனவும், கடல் மார்க்கமாக பயணிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டால் விமானப்படையினர் உதவவேண்டும் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் கோரிக்கைவிடுத்தார்.

கடற்படையினர் தமது உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தனர். குறிகாட்டுவான் இறங்குதறையிலிருந்து பயணிகளை ஏற்றி இறக்கும் இரண்டு படகுகளையும், புயல் நிலைமை ஏற்பட்டால் பாதுகாத்து தருவதற்கு கடற்படையினரின் உதவியை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் கோரினார். அதற்கும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

கால்நடைகள் கடந்த காலத்தில் இடர்நிலைமையில் அதிகளவில் உயிரிழந்தமையை கருத்தில்கொண்டு, கால்நடைகளை முற்கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதற்குரிய ஒழுங்குகள் கண்டாவளை மற்றும் நானாட்டானில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

வீதிகளில் குப்பைபோடுபவர்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் தமக்கு சமர்ப்பித்தால் சட்டநடவடிக்கை எடுக்க முடியும் என வடக்கு மாகாண சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார். இதேவேளை, யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் வீதிகளில் குப்பைபோடுபவர்களிடம் தண்டப்பணம்



அறவிடுவதற்குரிய வர்த்தமானி தயாரிக்கப்பட்டு வருவதாகவும் மாநகர சபை சார்பில் பங்கேற்ற பிரதிநிதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரையோரப் பகுதிகளில் இராணுவத்தினர் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டதாகவும் ஆனால் மக்கள் மீண்டும் மீண்டும் அங்கு குப்பைகளைப்போடுவதாகவும் இது கவலையளிப்பதாகவும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சார்பில் பங்கேற்ற பிரதிநிதி தெரிவித்தார்.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் குப்பைகளை அகற்றி துப்புரவான நகராக்குவதற்கான நடவடிக்கையை தாம் யாழ். மாநகர சபையுடன் இணைந்து செய்வதற்கு பொறுப்பெடுப்பதாக உள்ராட்சி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

இதேவேளை, இடர் நிலைமைகளை எதிர்கொள்வதற்காக கடற்படையினரின் 16 குழுக்கள் படகுகளுடன் தயாராக இருப்பதாகவும் மேலதிகமாக தேவைப்பட்டால் அதையும் பெற்றுக் கொள்ளக்கூடிய தயார் நிலையில் தாம் இருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

எதிர்வரும் இடர்நிலைமைகளின்போது பொதுமக்கள் இடர்முகாமைத்துவப் பிரிவின் 117 என்ற இலக்கத்துக்கு தொடர்புகொள்ள முடியும் எனவும், அதேநேரம் யாழ். மாவட்டத்தில் 021 222 1676, 0773957894 என்ற இலக்கங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 021 228 5330, 0772320528 என்ற இலக்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 021 229 0054 என்ற இலக்கத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் 023 211 7117 என்ற இலக்கத்துக்கும், வவுனியா மாவட்டத்தில் 0760994883 என்ற இலக்கத்துக்கும் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(17 பக்கத் தொடர்ச்சி)

## அநுர அரசின் ஆட்சி “மாற்றமா, ஏமாற்றமா?”

கே. பாலா

சந்திரிகா - ரணில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நோர்வே தலைமையிலான போர் நிறுத்த உடன்பாட்டை முறித்து மீண்டும் போரை ஏற்படுத்தி இலட்சக்கணக்கான தமிழர்களின் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் ஜே.வி.பி.யினர். அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு எதிராக பாராளுமன்றத்தில் வன்முறையில் ஈடுபட்டு தடுத்து நிறுத்தியவர்கள் ஜே.வி.பி.யினர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இணைக்கப்பட்டு தமிழர்களுக்கு பலத்தைக்கொடுத்த வடக்கு - கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தின் மூலம் துண்டித்து தமிழர்களை பலமிழக்கச் செய்து தமிழர் தயக்கத்தை பிரித்தவர்கள் ஜே.வி.பி.யினர்.

இவர்கள்தான் ஜே.வி.பி. என்ற தமிழர் விரோத உண்மை முகத்தை மறைத்து தேசிய மக்கள் சக்தி என்ற “அனைவரும் சமம்” என்ற போலி முகத்துடன் வருகின்றார்கள் தமிழர்களே, முஸ்லிம்களே இவர்களை நம்பாதீர்கள், இவர்களின் வரலாற்றை முதலில் தெரிந்து கொள்ளுங்கள் சிறுபான்மை இளைஞர், யுவதிகளே “மாற்றம்” என்ற மாயைக்குள் சிக்கிக்கொள்ளாதீர்கள் இவர்கள் உங்களுக்கு திசை காட்ட மாட்டார்கள், உங்கள் திசையை மாற்றுவார்கள் என அனுபவசாலிகள், அரசியல் தெரிந்தவர்கள், ஜே.வி.பி.யின் உண்மை முகம் தெரிந்தவர்கள் கூறியபோதெல்லாம் அதனை நிராகரித்து மாற்றத்திற்கு வாக்களிக்கின்றோம் என புரட்சி செய்துவிட்டு இன்று தேசிய மக்கள் சக்தி சிறுபான்மையினத்தவர்களை புறக்கணிக்கின்றது. மாற்றம் என்று விட்டு ஏமாற்றுகின்றது என ஒப்பாரி வைப்பதால் நடக்கப்போவது ஒன்றும் இல்லை. அடுத்த மாற்றத்திற்காக 5 வருடங்களுக்கு சிறுபான்மையினத்தவர்கள் பொறுத்திருக்கத்தான் வேண்டும். அதுவரை ஜே.வி.பி. என்ற தேசிய மக்கள் சக்தியின் இதுபோன்ற இன்னும் பல புறக்கணிப்புக்களை .ஏமாற்றங்களை சந்திக்கத்தான் வேண்டும்.

ஜே.வி.பி. என்ற தேசிய மக்கள் சக்தியிடம் பெரிதாக மாற்றத்தை, தமது எதிர்காலம் குறித்த புதிய திசையை எதிர்பார்த்தது தமிழ், முஸ்லிம்களின் தவறே தவிர அது அநுரகுமார அரசின் தவறல்ல. ஏனெனில் அவர்களின் கொள்கை சிறுபான்மையினங்களுக்கு எதிரானது என்பது வரலாறு. எனவே சிங்களக் கட்சியான அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியுடன் தமிழ், முஸ்லிம் மக்கள் நெருங்க, இணைய விரும்பிய வரலாற்று மாற்றம் ஒன்று நிகழ்ந்த நிலையில் தனது இனவாதம் என்ற மாறாத கொள்கையால் தமக்கு வரலாற்று வெற்றியைப் பெற்றுக் கொடுத்ததில் பெரும்பங்கு வகித்த தமிழ், முஸ்லிம் மக்களை தூரத்தில் வைத்து அநுரகுமார அரசும் கட்சியும் வரலாற்றுத் தவறிழைக்கின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது



27ம் திகதி புதன்கிழமை அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மாவீரர் நாள் அனுஸ்டிப்பு நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஏனையோர் சுடர் ஏற்றி வைத்தனர். பின்னர் தம் இன்னுயிர்களை தியாகம் செய்த வீர மறவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் மாணவர்கள் மாவீரர்களுக்கான வணக்க நிகழ்வில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



(27-11-2024)

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பொலிஸார் மோதல்

## கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்ல பகுதியில் சம்பவம்

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் 27ம் திகதியன்று மாவீரர் நினைவேந்தல் நடைபெற்றன.

இந்த மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணிகள் திருக்கோவில் பிரதேச மாவீரர் குடும்பங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் அரசியல் கட்சிகள் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டதோடுஇ மேற்படி துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியில் காணப்பட்ட பற்றைப்புதர்களை அகற்றிஇ விழுந்து கிடந்த நினைவுச் சுடர்களை நிறுத்தி வைத்து துப்புரவுப் பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்படி இன்று இம்மாவீரர் துயிலும் இல்லத்தில் நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாலை தமிழரின் தேசிய மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. அன்று மாலை 6.05 நிமிடத்தில் மாவீரர்களுக்கான பொதுச் சுடர் ஏற்றி நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்க அனுர அரசு இடமளிக்கும் என்று நம்பிக்கையுடன் அங்கு சென்ற மக்களிடம் பொலிஸார் பாதுகாப்பு கெடுபிடிகளை விதித்து அங்கு செல்வதை தடுக்க முயற்பட்டள்ளனர். அத்துடன் அங்கு சென்ற வாகனங்களின் நம்பர் பலகைகள் பொலிஸாரினால் பதியப்பட்ட பின்னர் குறித்த மாவீரர் துயிலும் இல்லத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.



அத்துடன் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் பொலிஸார் முரண்பட்டதுடன் அங்கு சிறு பதற்ற நிலையும் ஏற்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு மாவீரர் துயிலும் இல்லம் திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் அமைந்துள்ளது.அம்பாறை மாவட்டத்தில் 700க்கும் மேற்பட்ட மாவீரர்களின் நினைவுச்சுடர்கள் இங்கு நிறுவப்பட்டுள்ளன. கஞ்சிகுடிச்சாறு மாவீரர்கள் துயிலும் இல்லத்தில் கடந்த 1993ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டுவரை தமிழீழ விடுதலைப் புலிகளினால் தீபம் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது.

# நெடுந்தீவு நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்!





நெடுந்தீவு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 03 நோயாளர்கள் மேலதிக சிகிச்சையளிக்கும் வகையில் விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு நவம்பர் 28ம் திகதி அன்றையதினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நெடுந்தீவில் இருந்து 03 நோயாளரும் அவர்களது 3 உதவியாளர்களும் உலங்கு வானூர்தி மூலம் பலாலி விமான நிலையம் கொண்டு செல்லப்பட்டு தரைவழியாக கொண்டுசென்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




கனடிய செய்திகள் Canadian News

# கனடாவில் தமிழ் உணர்வாளர் நடிகர் கருணாஸ்!

## தனது "சல்லியர்கள்" திரைப்படத்தை எமது மக்களுக்காக திரையிடும் நோக்கோடு அவரது பயணம்!

## எமது தாயக விடுதலைப் போரில் அயராது உழைத்த மருத்துவப் போராளிகளின் அனுபவங்களை திரைக்கு கொண்டுவரும் "சல்லியர்கள்" திரைப்படம் வெற்றிபெற ஆதரவு வழங்கும் எம்.பி.பி லோகன் கணபதி அவர்களும் அவரது குழுவினரும்!




பிரபல நடிகரும் முன்னாள் சட்டசபை உறுப்பினரும் தமிழ் உணர்வாளருமான நடிகர் கருணாஸ் அவர்கள் தற்போது கனடா வந்துள்ளார். அண்மையில் அவர் தயாரித்து வெளியிட்ட தனது "சல்லியர்கள்" திரைப்படத்தை கனடாவில் எமது மக்களுக்காக திரையிடும் நோக்கோடு அவரது பயணம் அவரது பயணம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களோடு ரொறன்ரோ மாநகரில் அமைந்துள்ள "குயின்ஸ்பார்க்" பாராளுமன்ற வளாகத்திற்குச் சென்ற அவர் அங்கு பாராளுமன்ற அமர்வின் போது அவரது வருகை பற்றியும் மற்றும் எமது போராட்ட காலங்களில் காயப்பட்ட போராளிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்த கதையைக் கொண்ட "சல்லியர்கள்" திரைப்படம் பற்றியும் லோகன் கணபதி அவர்கள் தனது உரையில் தெரிவிக்க, பாராளுமன்ற சபா மண்டபத்தில் அமர்ந்திருந்து அதை செவிமடுத்தார். அப்போது பல மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று கரகோசம் செய்து அவரை வரவேற்றனர்.

பின்னர் ரொறன்ரோ நகரில் நடைபெற்ற மாவீரர் நாள் வணக்க நிகழ்விற்கு லோகன் கணபதி அவர்களோடு சென்று அதில் கலந்து கொண்டார். அங்கும் தமிழ் மக்களோடு உரையாடினார்.

27ம் திகதி மாலையில் அவர் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருக்கு வழங்கிய நேர்காணலில். அவர் தனது புதிய திரைப்படமான "சல்லியர்கள்" பற்றிய தனது கருத்துக்களைத் தெரிவித்தபோது பின்வரும் விடயங்களை தெளிவாகவும் எமது ஈழத்தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றோடும் உணர்வோடும் தெரிவித்தார்.

தொடர்ந்து நடிகர் "சல்லியன்" திரைப்படம் பற்றியும் ஈழத்தமிழர்களின் போராட்டம் உச்சத்தை தொட்டு நின்ற நிலையில் அதை அந்த வீரத்தை சதி செய்து அழித்திட்ட உலகின் பல நாடுகளின் பங்களிப்பைப் பற்றி கவலையும் பகிர்ந்து கொண்டு திரைப்படத்திற்குள் சென்றார்.



உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் திரைப்படத்தின் நடிக நடிகையர்கள் ப்றறி அவரது கருத்துக்களை கேட்கவிரும்புவதாகக் கூறியபோது. நடிகர் கருணாஸ் அவர்கள் ஒரு உணர்வுபூர்வமான பதிலைத் தெரிவித்தார.

"நான் "சல்லியன்" திரைப்படத்தில் ஆயுதம் தாங்கிய போராளிகளாக நடித்தவர்களையும் மருத்துவப் போராளிகளாக நடித்தவர்களையும் ஏனைய சாதாரண பாத்திரங்களில் நடித்தவர்களையும் நடிக நடிகையர்களாக பார்க்கவில்லை. அவர்கள் அனைவரும் களத்தில் நிற்கும் உண்மையான போராளிகளாகவே பார்த்தேன். விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மக்களின் பேராதரவு இருந்தது. அவ்வாறான மக்களின் ஒரு பகுதியாக இருந்தவர்களையும் உணர்வுள்ள தமிழ் மக்களாகவே பார்த்தேன்.

இந்த "சல்லியன்" திரைப்படத்தின் மூலம் அதில் நடித்தவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்களும் அதை எதிர்பார்க்கவில்லை. "சல்லியன்" திரைப்படத்தை தயாரித்ததின் நோக்கமே. இவ்வாறான ஒரு கடினமான போர்க்களத்தில் போராளிகளையும் மக்களையும் காப்பாற்றி தங்களையும் காப்பாற்றிக் கொள்ள மருத்துவப் போராளிகள் எவ்வளவு அர்ப்பணிப்பை செய்திருப்பார்கள் என்பதும் அதை அந்த போராளிகள் தியாகத்தின் காரணமாக வெளிநாடுகளில் அவர்களின் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களில் மனங்களில் போராளிகளின் பெருமையும் தியாகமும் நன்கு பதிய வேண்டும் என்பது தான்." என்றார்.



எமது தாயக விடுதலைப் போரில் அயராது உழைத்த மருத்துவப் போராளிகளின் அனுபவங்களை திரைக்கு கொண்டுவரும் "சல்லியர்கள்" திரைப்படம் வெற்றிபெற ஆதரவு வழங்கும் எம்.பி.பி லோகன் கணபதி அவர்களும் அவரது குழுவினரும் இணைந்து 29ம் திகதி நடைபெறவுள்ள பத்திரிகையாளர் சந்திப்பில் இங்குள்ள அனைத்து பத்திரிகையாளர்களும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

**Arjune - Local Journalism Initiative Reporter**



Toronto சிட்டி கவுன்சிலர்

PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

# பெண்ணெனும் பேராற்றல் (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

*தாய்மையால் பூமிக்குத் தனித்துவம் தருபவள்*
*வாய்மையால் வெல்லும் வல்லமை கொண்டவள்*
*எளிமையில் விதையவள் எதிர்த்தால் மரமவள்*
*பழிபாவம் பார்ப்பவள் பாசத்திற் கேங்குபவள்*
*கடமையில் கதிரவன் கடுமையில் எரிமலை*
*கொடுமையை எதிர்ப்பவள் கொடுப்பதில் நிகரவள்.*
*சீர்மையில் சிற்பமவள் சிந்தையில் சிறந்தவள்*
*சேர்க்கையைக் காப்பவள் சேவகம் செய்பவள்*
*துணையவன் நிழலவள் தூய்மை உள்ளமவள்*
*துணைக்கு உறவவள் தோழமைக் கேங்குபவள்*
*வீட்டினுள் பூட்டியே விசும்பி வெந்தவள்*
*பாட்டினுள் பாரதியும் புரட்சியை வெடிக்கவே*
*காட்டின் புலிகளாய்க் கர்ச்சித்துப் புறப்பட்டு*
*நாட்டின் நலனுக்காய் நலம்பல செய்தவள்*
*வேலு நாச்சியார் வீரம் போன்றே*
*நாளும் பொழுதும் நாட்டுக்காய் உழைத்தவள்*
*ஆயுதம் ஏந்தியே அன்னியரை அழித்தவள்*
*பாயும் புலியாய்ப் பலகளம் கண்டவள்*
*எட்டாத கல்வியை எட்டியே பிடித்தவள்*
*எட்டும் வரைசென்று எல்லைகள் தொட்டவள்*
*பூட்டிய கதவுகளைப் புத்தியால் திறந்தவள்*
*போட்டி போட்டுப் புதுமைகள் செய்தவள்*
*"பெண்ணெனும் பேராற்றல்" பெற்ற பிறவிகளை*
*கண்ணெனக் காத்துமே காசினியில் உய்வோமே!*

---

***ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்***
***(416) 844-7453***

# அன்பின் தொனி - 792

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என் வழிகளை அறிய விரும்புகிறார்கள்**

சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி. தங்கள் தேவனுடைய நியாயத்தைவிட்டு விலகாமல் நீதியைச் செய்து வருகிற ஜாதியாரைப்போல் அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என் வழிகளை அறிய விரும்புகிறார்கள்; நீதி நியாயங்களை என்னிடத்தில் விசாரித்து தேவனிடத்தில் சேர விரும் புகிறார்கள். நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீர் நோக்காமலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக்களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிறதென்ன என்கிறார்கள்; இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் இச்சையின்படி நடந்து, உங்கள் வேலை களையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள். இதோ, வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத் தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்; நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளில் உபவாசிக்கிறதுபோல் உபவாசியாதிருங்கள் மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக் குமோ இதையா உபவாசமென்றும்கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?

**என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி**

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக்கண்டால் அவனுக்கு வஸ்திரங்கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். நுகத்தடியையும் விரல் நீட்டுதலையும், நிபச் சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி, பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால், அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத்தைப்போலாகும். கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும் புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய். உன்னிடத்திலிருந்து தோன்றினவர்கள் பூர்வமுதல் பாழாய்க் கிடந்த ஸ்தலங்களைக் கட்டுவார்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்; திறப்பானதை அடைக்கிறவன் என்றும், குடியிருக்கும்படி பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய். என் பரிசுத்தநாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன்வழிகளின்படி, நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மன மகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடை ய வாய் இதைச் சொல்லிற்று. **- ஏசாயா 58: 1-14**

**தொடரும்...**

---

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சத்தியமூர்த்திக்கு ஓர் பகிரங்க மடல்!



எம்மைப்போல் இன்னொரு ஏழைமகன் யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரால் இனிமேலும் பாதிக்கப்படக் கூடாதென்பதாற்காகவே பல தடவை சிந்தித்து இம்மடலை வரைகிறோம்.

கடந்த 08.11.2024 பி.ப 6.45 மணியளவில் எமது தாயாரை யாழ் போதனா வைத்தியசாலையின் 24ம் இலக்க விடுதியில் அனுமதித்திருந்தோம். வீட்டில் விழுந்த அவரை அனுமதித்த வேளையில் அவ்விடுதியில் கடமையில் இருந்தவர் சத்திரசிகிச்சை நிபுணர் Dr. Umashankar பி.ப 6.45ற்கு அனுமதித்த போதிலும் Medical students புடை சூழ தன்னை ஒரு ராஜாவாகப் பாவித்து வலம் வந்த வைத்திய நிபுணர் நோயாளியின் அருகில் கூட வராமல் ஆ செலூலைற்றிஸ் என்றவாறு செல்ல குறுக்கிட்ட எனது கணவர் “Dr அம்மா விழுந்துவிட்டா அதுதான் Admit பண்ணினோம்” என்றார். ஆ அப்ப ஓசயல போடு என்றவாறு விரைந்து விட்டார். கிட்டத்தட்ட இரவு 9 மணியளவிலே Xray unit க்கு கொண்டு சென்று மீண்டும் விடுதியில் விட்டுச்சென்றோம்.

மறுநாள் அவரை 16 A விடுதிக்கு மாற்றியிருந்தார்கள். Xray இல் எந்த பிரச்சினையும் இல்லை செலூலைற்றிஸ் கே வைத்தியம் பார்ப்பதாகச் சொன்னார்கள். இப்படியாக வைத்தியம் பார்த்தவர்கள் 11.11.2024 காலை முதல் அவாருக்கு Urine போகாத காரணத்தினால் இரத்தப்பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்பித்திருந்தனர். மதிய வேளையில் CRP 536 இல் இருப்பதாகக் கூறியிருந்தனர். மருந்தாளரான மகனுக்கு தாயின் நோயின் தீவிர நிலைமை புரிந்திருந்தது. ஒரேயொரு மகனைப் பெற்ற கணவனையிழந்த அந்த 69 வயதான தாய் நன்றாகவே கதைத்தபடி மகனுடன் இருந்தவர் பி.ப 2 மணியளவில் அவரது அன்புப் பேர்த்தியை காண வேண்டும் என்ற அவாவில் “தம்பி Babyamma வை கூட்டிக்கொண்டு வந்து காட்டுறியோ” என்று கேட்க ஓம் அம்மா என்ற மகன் வீட்டிற்கு வந்து மனைவியையும் 3 பிள்ளைகளையும் அழைத்துச்சென்று பி.ப 3 மணியளவில் விடுதிக்குள் நுழைகின்றார். தன்னோடு கதைத்திருந்த தாயின் கடைசி ஆசையை நிறைவேற்ற முடியாது போகுமென்று அம்மகன் அறிந்திருக்கவில்லை. ஆசையாய் அப்பம்மாவைப் பார்க்கச் சென்ற பேரப்பிள்ளைகள் அடக்கத்தில் போய்க்கொண்டிருக்கும் அப்பம்மாவையே பார்க்க முடிந்தது. Ward ன் Emergency bed க்கு மாற்றியிருந்தார்கள். Pulse rate high ஆகவும் BP very low ஆகவும் இருந்தது. இரவு 7 மணியளவில் Dialysis செய்வதற்காக அழைத்துச் சென்றார்கள். அது வரை மகனும் மருமகளும் 3 குழந்தைகளும் விடுதியிலேயே வாடியிருந்தோம். Dialysis இரவு 11 மணியளவிலேயே முடிவடையும் என்பதால் வீடு திரும்பியிருந்தோம். இரவு 11.45 மணியளவில் விடுதியிலிருந்த உறவொன்று அழைத்து தாயின் நிலை கவலைக்கிடம் எனக்கூற வைத்தியசாலை விடுதியை 12.11.2024 அதிகாலை 12.10 மணியளவில் சென்றடைய 12.08 மணிக்கு தாயின் உயிர் பிரிந்ததாக கூறிய கடமையிலிருந்த வைத்தியர்கள் இரண்டு மணி நேரத்தின் பின்னர் mortuary இல் சடலத்தை ஒப்படைப்பதாகவும் Consultant inquest போட்டிருப்பதால் பிரேத பரிசோதனையின் பின்னரே சடலத்தை ஒப்படைக்க முடியுமெனக் கூறப்பட்டது.

வீடு திரும்பிய மகன் காலை 7 மணியளவில் மீண்டும் வைத்தியசாலைக்குச் செல்ல விடுதிக்கும் பிணவறைக்குமாக மாறி மாறி அலைக்கழிக்கப்பட இறுதியாக பணிப்பாளரின் அலுவலகத்தை நாட அங்கிருந்தவரின் வழிப்படுத்தலி படிவமொன்றைப் பெற்றவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையம் செல்கிறார். பொலிஸாரின் அறிவுறுத்தலின் பேரில் மகன், மருமகள், அயலவர் ஒருவர் மற்றும் இறந்தவரின் சகோதரர் ஒருவர் என நான்கு பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். காலை 10 மணி முதல் நால்வரும் மரண விசாரணை அதிகாரியின் அலுவலக வாசலில் காவலிருக்கின்றனர். நண்பகல் 12.30 அளவில் வருகை தந்த அவரது விசாரணைகள் சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைகள் பூர்த்தியடைய பி.ப 1.08 அளவில் கீறிக்கிழித்த உடலத்தை காண்பிக்கிறார்கள். பின்னர் மூட்டையாக பெற்சீற்றால் சுற்றியவாறு ஒப்படைக்கின்றனர். அதற்குள் Gate pass ஐ பெற்றுக்கொள்வதற்காக Overseer அலுவலகத்தில் பல நிமிட காத்திருப்பின் பின்னர் அமரர் ஊர்தியில் ஏற்றப்பட்ட கீறிக்கிழிக்கப்பட்டு தைக்கப்படாத சடலம் அவர்களின் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு பி.ப 2.45 மணியளவிலேயே வீட்டை வந்தடைந்தது.

இவ்வளவு சம்பவத்தையும் குறிப்பிடக் காரணம்

1. நான்கு நாட்கள் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று மரணித்தவருக்கு Inquest போட வேண்டிய அவசியம் என்ன?

2. பதின்நான்கு வருடங்களாக Dr. Peranandharaja வின் மருத்துவ clinic செல்லும் நோயாளிக்கு அவரது Full history உள்ள clinic கொப்பிகளை ஆராய்ந்து அனுமதித்த நாள் முதலே சிகிச்சைகளை ஆரம்பித்திருக்க முடியாதா?

3. அனுமதித்த உடனேயே செலூலைற்றிஸ் எனக் கூறியவர்கள் உடனேயே CRP பார்த்திருந்தார்களா?

4. பார்த்திருப்பின் நான்காவது நாளில் CRP 536 ஆகும் வரை வைத்தியம் பார்க்கவில்லையா?

5. அறுபத்தொன்பது வயது தானே என்ற அலட்சியமா?

6. நான்கு நாட்கள் விடுதியில் இருந்து இறந்தவரின் உடலத்தை கீறிக்கிழிக்கலாமா?

7. கிழித்த உடலத்தை தைக்காமல் கையளிக்கலாமா?

(பெட்டி, வாகனம், மேளம் என்பவற்றுக்காக ரூ.52000 பேசியிருந்த லக்கி ஹவுஸ் தைத்தமைக்காக மேலதிகமாக ரூ.13000 பெற்றிருந்தனர்.)

8. சமூகத்தில் நல்நிலையிலுள்ள எமக்கு இந்நிலையாயின் பாமர மகனொருவரின் நிலை எவ்வாறிருக்கும்?

எமது தாயின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. நாம் உங்கள் நிர்வாகத்தோடு எந்தப் பிரச்சினைக்கும் வரப்போவதில்லை. இருப்பினும் இம் மடலை வரையக் காரணம் நாளை எம்போல் எவரும் பாதிக்கப்படக் கூடாதென்பதற்காகவே!

எமது சுகாதார அமைச்சர் கண்டி போதனா வைத்தியசாலையின் கழிப்பறையையே சுத்தம் செய்து சென்றிருக்கிறார்.தாங்கள் அவ்வாறெல்லாம் இறங்கத் தேவையில்லை. உங்கள் கதிரையைக் காப்பாற்றுவதற்காய் உங்கள் நிர்வாகத்தின் கீழ் நடக்கும் முறைகேடுகளை கண்டும் காணாமல் விடாமல் இலவச மருத்துவத்தை ஏழைகளைக் காப்பதற்காய் பயன்படுத்துங்கள் என்பதே எமது வேண்டுகோள்.

இம்மடலால் ஏற்படவிருக்கும் விளைவுகள் ஏழைகளைப் பாதுகாப்பதற்காய் மாறட்டும். இலங்கை அரசாங்கத்தின் இலவசக் கல்வியால் பட்டதாரியாய் அரசசேவையில் இருக்கும் ஓர் ஏழையின் குரல் ஏழைகளுக்காய் ஒலிக்கிறது!

நன்றி.
திருமதி. ஷர்மிலா சிவகணேசன் B.A,PGDE,PGD in TESL,M.A
ஆசிரியர், யா/வட்டு இந்துக் கல்லூரி.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடிய அரசாங்கம் அறிவித்துள்ள உணவுப் பொருட்கள் மீதான தற்காலிக வரி நீக்கம்

## Canada's Liberal Government announced, temporary GST/HST Tax Cut for two months



Eligible Canadians will soon receive a temporary tax break on essential items, children's clothing and diapers, restaurant and pre-prepared meals and common stocking stuffers, along with a one-time $250 rebate, Canada's Prime Minister Justin Trudeau made an announcement on Nov 21, Thursday in Ottawa.




The two-month Goods and Services Tax/Harmonized Sales Tax (GST/HST) break will apply across the country, and is aimed at addressing lingering affordability concerns, according to the federal government.

"Canadians have been through a lot. They work hard. We see that. We've been able to get through the past couple of years. Everyone had to tighten their belts a little bit. Now we're going to be able to give a tax break for all Canadians, " Trudeau said.

In the mean time, on Friday 22, Nov in Markham, Minister Mary Ng met the ethnic media Editors to express her views on this TGSTax Cut.

"While inflation is back on target and interest rates are dropping faster than anywhere else, we know many Canadians are still feeling the pinch. This week, the Liberal Government announced this holiday season, they're stepping up to give Canadians a break.

Minister Mary Ng visited Sunny Food Mart to amplify this announcement and talk about what it means.

Minister Mary Ng further said, "We can't control prices at the checkout, but we can help ease the burden. Starting December 14, we're giving Canadians a tax break to help them afford the essentials—and save for the things they want. We are providing real relief at the register for Canadians when they need it most'.

As of next spring, workers earning less than $150,000 will receive a $250 cheque directly in their account. For example, a family in Ontario spending $2,000 would save $260 on qualifying goods between December 14 and February 15."

**Ganeshananthan - Local Journalism Initiative Reporter**

---

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பில் வெள்ளத்தினால் ஒருவர் இழுத்து செயல்பட்டு காணாமல் போயுள்ளதுடன் 522 பேர் இடம்பெயர்வு

## குளங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டன

சீரற்ற கால நிலை காரணமாக மட்டக்களப்பில் வெள்ள நீரினால் ஒருவர் இழுத்து செல்லப்பட்டுள்ளதுடன் வெள்ளத்தினால் 161 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளதுடன் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளதால் பல பிரதேசங்களுக்குன போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் பல பிரதேசங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்க்கின்றது.

இந்த தொடர் மழையினால் மாவட்டத்திலுள்ள பல தாழ்நில பிரதேசங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்துள்ளதுடன் பல பிரதேசங்களில் வீதிகளில் உள்ள பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதுடன் இந்த வெள்ளத்தினால் பட்டிப்பளை, காத்தான்குடி, கோரளைப்பற்று கிரான், மண்முனைவடக்கு, ஏறாவூர்பற்று செங்கலடி, பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 161 குடும்பங்களைச் சேர்ந்த 522 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளைவிட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.



அதேவேளை வெள்ளத்தினால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்து மற்று வவுணதீவுக்கும் மட்டக்களப்பு நகருக்கும் இடையிலானதும் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்கும் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதுடன் வெல்லாவெளிக்கும் மண்டூருக்குமான பிரதான தாம்போதிக்கு மேலால் வீதியை மூடி 4 அடி உயரத்தில் வெள்ள நீரி பாய்து ஓடும் நிலையில் அதனை கடந்து செல்ல முற்பட்ட ஆண் ஒருவரை வெள்ள நீர் இழுத்து சென்று காணாமல் போயுள்ளார்.

மாவட்டத்தில் 25ம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை ஆகக்கூடிய மழைவீழ்சியாக வாகனேரியில் 139.0 மில்லிலீற்றரும் மட்டக்களப்பில் 103.4 மில்லி லீற்றருமாகவும் நேற்று செவ்வாய்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பகல் 11.30 மணிவரை மட்டக்களப்பில் 34 மில்லிலீற்றர் மழை பெய்துள்ளதாக மாவட்ட வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.



மாவட்டதிலுள்ள உன்னிச்சை குளத்தின் 3 வான்கதவு 10 உயரத்திலும் நவகிரிகுளம் றூகம்குளம், வாகனேரிகுளம், கட்டுமுறிவுகுளம், கித்துள்குளம், வெலியாகண்டிகுளம், வடமுனைகுளம், புனானைகுளம், ஆகிய குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் அந்த அந்த குளங்களின் நீர் மட்டத்துக்கு ஏற்றவாறு அளவில் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேவேளை மழையுடனான காற்றினால் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஈச்சம்தீவு கன்னங்குடா பலநோக்கு கூட்டுறவு சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருகில் இருந்த மரம் ஒன்று கட்டித்தின் மீது முறிந்து வீழ்ந்ததால் கட்டிடம் பாதிக்கப்பட்டதுடன் மரத்தை வெட்டி அகற்றும் நடவளக்கையினை மேற்கொண்டுவருகின்றனர் அதேவேளை மாவட்டத்தில் வீதிகளில் முறிந்து வீழ்ந்த மரங்களை மாநகரசபையின் தீயணைப்பு படையிளர் வெட்டி அகற்றிவருகின்றனர்.

தொடர்ந்து மழை பெய்துவருவதான் மக்களின் இயல்பு வாழ்க்கை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளதுடன் உயர்தர மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பாடசாலைகளுக்கு சென்று பரீட்சைக்கு தோற்றியுள்ளதுடன் இன்னும் பல இடங்களில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் எற்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் வயலில் வெள்ளத்தில் சிக்குண்ட விவசாயி ஒருவர் விமானப்படையினர் ஹெலிகொப்டர் மூலம் மீட்பு

மட்டக்களப்பு புல்லுமலை தம்பட்டி, மற்றும் மாவடிஓடை வண்ணாத்திஆறு பகுதிகளில் உள்ள வயல்களில் வேளாண்மை நடவடிக்கைக்கு சென்ற 7 விவசாயிகள் அந்த பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் அங்கிருந்து வெளியேறி வீடு திரும்ப முடியாமல் இரு தினங்களாக சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஒரு விவசாயியை விமானப்படையினர் கெலிகொப்டர் மூலம் 27ம் திகதி அன்று புதன்கிழமை மீட்டனர்.

குறித்த பகுதியிலுள்ள வயல்களில் வேளாண்மை காவலுக்கு கடந்த திங்கட்கிழமை (25) சென்ற மற்றும் வேளாண்மை நடவடிக்கைகளுக்காக புல்லுமலை தம்பட்டி வயல் பிரதேசத்தில் 3 விவசாயிகளும் மாவடி ஓடை வண்ணாத்திஆறு வயல் பிரதேசத்தில் 4 பேர் உட்பட 7 விவசாயிகள் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் தொடர் கடும் மழை காரணமாக அந்தபகுதியிலுள்ள குளங்களின் வான்கதவு திறக்கப்பட்டதையடுத்து வயல் நிலங்கள் வெள்ளத்தில் முழ்கியதுடன் வீதிகள் பல மூழ்கியதையடுத்து அந்த விவசாயிகள் தமது வாடிகளில் இருந்து வீடுகளுக்கு வெளியேறமுடியாமல் சிக்குண்டுள்ளனர்.

இவ்வாறு சிக்குண்டவர்களை மீட்கும் நடவடிக்கையினை 27ம் திகதி புதன்கிழமை விமானப் படையினர் மலைவெட்டுவான் வயல் பகுதியில் சிக்குண்ட ஒருவரை கொலி கொப்டரிர் மூலம் மீட்டெடுத்தனர்.



அதேவேளை கொக்கச்சிமடு பகுதியில் வெள்ளத்தில் சிக்குண்டுள்ள 4 குடும்பங்களை மீட்பதற்கு கெலிகொப்டரில் இருந்து கயிறு இறக்கப்பட்டபோதும் அவர்கள் கயறில் ஏறும் பயத்தினால் ஏறமறுத்துள்தனால் அவர்களை மீடகமுடியாமல் கொலிகொப்டர் திரும்பியுள்ளது.

அதேவேளை புல்லுமலை தம்பிட்டி வயல் பிரதேசத்தில் சிக்குண்ட 3 பேரில் ஒருவர் வெள்ளத்தில் நீந்தி கரையேறியதுடன் ஏனைய இருவரையும் பொலிசார் மீட்டுள்ளதுடன் இந்த சிக்குண்ட 4 குடும்பங்களையும் படகின் மூலம் மிட்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.



# நிந்தவூர் மாட்டுபாளையம் பிரதான வீதியிலுள்ள பாலம் ஊடைந்து வீழ்ந்து போக்குவரத்து துண்டிப்பு

கல்முனைக்கும் அக்கரைப்பற்றுக்கும் இடையிலான ஓலுவில் களியோடை பலத்திற்கு அடுத்ததாக நிந்தவுர் பகுதியிலுள்ள பாலம் வெள்ளத்தினால் உடைந்து வீழ்ந்ததால் அதனூடான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

# இவ்வார ராசிபலன்

## 29-11-2024 வெள்ளி தொடக்கம் 05-12-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு, நிலமும் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோ'ம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W




**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம், இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,6
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்ரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிபரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராடடுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L





**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

(தொடர்ச்சி _26_ பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1122

## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், மலையகம்

“ தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது துணிந்திச்சையே புண்டு
செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றோ ”

ஆரம்பகாலத்திலிருந்தே திராவிடமக்கள் பெண்தெய்வவழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டுள்ளனர். பண்டைய திராவிட மக்கள் தமக்கு வளங்களை வாரிக்கொடுத்த பூமியைப் போற்றி, தரைப் பெண்ணாக வழிபாடு செய்துள்ளனர். சிந்துவெளி நாகரிகத்தின் வெளிப்பாடாகப் போற்றப்படும் மொஹஞ்சதாரோ, ஹராப்பா போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட முத்திரகளில்லே, பெண்தெய்வ வடிவங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. திராவிட, ஆரிய பண்டபாடுகள் கலந்து உருவாகிய இந்துசமயத்திலும், பெண்தெய்வ வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை கண்கூடு. ஆரியரின் பண்பாடும், ஆதிக்கமும் திராவிட வழிபாட்டு முறையிலே ஊடுருமுன், ஈழத்திலே ஆன்மார்த்த வழிபாடு மிக உன்னத நிலையிலே காணப்பட்டுள்ளது.

தாம் வாழும் சூழ்நிலைக்கேற்ப வழிபாட்டு முறைகளை அமைத்துக்கொள்வது, எல்லாச் சமூகங்களிடையேயும் காணப்படுகின்றது. பண்டைக்காலத்திலே தாய்மையைப் போற்றியதோடு, தாயை வழிபடும்முறையும் பெருவழக்காகக் காணப்பட்டுள்ளது. இம்மரபே பின்னர் அம்மன் வழிபாடாக மாற்றம் பெற்றது. சங்ககாலந்தொட்டு திராவிட மக்கள், வீரவழிபாட்டு முறையையும் போற்றி வந்துள்ளனர். கண்ணகை, நாச்சிமார், முத்துமாரி போன்ற வழிபாட்டு முறைகள் வீரவழிபாட்டின் வழிவந்தவையாகவே காணப்படுகின்றன. இவ்வாறான வீரவழிபாடு தழுவிய பல ஆலயங்கள், ஈழமெங்கும் பரவிக் காணப்படுகின்றது.


அழகுமிகு ஈழத்திருநாட்டின் மத்தியில் அமைந்துள்ள மலையகம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாக விளங்குகின்றது. முழுமுதற்கடவுளின் திருப்பாதம் பதியப்பெற்ற, சிவனொளிபாதமலை அமைந்துள்ள வளமிகுபிரதேசம், மலையகம் எனில் மிகையாகாது. இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் உழைப்பால் உயிர்த்த. மலையகமெங்கும் அருள்நெறி பரப்பும் ஆலயங்கள் பல காணப்படுகின்றன. மலையகத்திலும் அன்னை வழிபாடு பிரசித்திபெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. இத்தயை வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாக, மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் விளங்குகின்றது.

தற்காலத்திலே மாத்தளை என அழைக்கப்படும் இப்பிரதேசம், பண்டைக் காலத்திலே பன்னாகமம் என அழைக்கப்பட்டுள்ளது. பல்ு நாகம் என்பதிலிருந்தே பன்னாகமம் என்ற பெயர் உருவாயிற்று. ஆதியிலே நாகவழிபாடு உலகெங்கும் பின்பற்றப்பட்ட வழிபாடாகக் காணப்பட்டுள்ளது. ஈழத்தின் ஆதிக்குடிகளாகிய நாகர்களின் முதன்மைபெற்ற வழிபாடாகவும் நாகவழிபாடு திகழ்ந்துள்ளது. பன்னாகமத்திலும் நாகர்கள் வாழ்ந்துள்மைக்கு, பன்னாகமம் போன்ற பெயர்களே சான்றாகக் காணப்படுகின்றது. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஆதிவரலாறும் நாகத்தோடு தொடர்புடையதாகவே காணப்படுகின்றது. பல தலைகளையுடைய நாகமொன்று ஸ்ரீ முத்துமாரியம்மனை வழிபட்டதாகக் கர்ணபரம்பரைக் கதையொன்று வழக்கிலுண்டு. இக்காரணத்தினாலேயே இப்பிரதேசத்திற்கு பன்னாகமம் என்ற பெயர் ஏற்பட்டதெனக் கூறுவர்.

ஈழத்திலே அருள்பிரவாகமெடுத்துக் காணப்படும் ஆலயங்கள் பலவற்றோடும் நாகவழிபாடும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. நினைத்தமாத்திரத்தில் தாம் விரும்பிய உடலுக்குள் புகுந்து அருட்செயல்களை நிகழ்த்தியுள்ள சித்தர்கள், நாகவடிவிலே ஆலயங்களில் உறைவதாக முன்னோர்கள் கூறியுள்ளனர். பிறர் அறியாது விரைந்து தம்மை மறைத்துக்கொள்ளவும், தேவையேற்பட்ட காலத்தில் அச்சுறுத்தவும், நாகவடிவம் ஏற்றதாகக் கொள்ளப்படுகின்றது. பல ஆலயங்களிலே சித்தர்களும், ஞானியரும் வாழ்ந்து தமது பூதஉடலை விட்டுவிட்டு, அங்கேயே தங்கியிருந்து விக்கிரகங்களின்மூலம் தம்மைநாடிவரும் பக்தர்களுக்கு, அருள்பாலிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நாடெங்கும் ஆலயங்கள் பரந்து காணப்பட்டபோதிலும், ஒருசில ஆலயங்கள் அருள்பிரவாகமுள்ள ஆலயங்களாக அமைவதற்கு, இவ்வாறான சக்தியே காரணமாகக் கருதப்படுகின்றது. நாகவழிபாட்டோடு தொடர்புடைய மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும், அருள்பிரவாகமுள்ள ஆலயமாகக் காணப்படுவதோடு, பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தச் சக்தியை ஆத்மார்த்தமாக அனுபவித்துள்ளனர்.

ஈழத்தின் மத்தியில் அமைந்துள்ள, மலையகத்தின் வடக்கு வாயிலாகத் திகழும் மாத்தளை மாவட்டம், பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டதாகக் காணப்படுகின்றது. சங்க காலத்தே போற்றப்பட்ட ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றுள், குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று நில அமைவுகளையும் கொண்டதாக மாத்தளை மாவட்டம் காணப்படுகின்றது. ஈழத்தை ஆட்சிசெய்தவனும், சாமகானப் பிரியனும், திராவிட மன்னாக விளங்கிய வீரனுமாகிய இராவணனுடைய கோட்டை, மாத்தளை மாவட்டத்திலுள்ள இரத்தினங்கள் நிறைந்த, “லக்கல” என்ற பகுதியிலே அமைந்துள்ளதாக, ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சிங்கள மக்கள் எழுதாமறையாகப் போற்றும் திரிபீடகம், மாத்தளை மாநகரில் அமைந்துள்ள அலுவிகாரையிலேயே எழுதப்பட்டது. இலங்கை விடுதலைப்போரில் சுதந்திர வேட்கையுடன் போரிட்ட முத்துசாமிநாயக்கர் என்பவர், மாத்தளை மண்ணின் வீரமைந்தனாகப் போற்றப்படுகின்றார்.

தொடரும்...



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவினர் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமி'ன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத விஷயங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# எதிர்கால வெள்ளஇடர் தணிப்பு நடவடிக்கைகளை இப்போதே திட்டமிடுங்கள் – அதிகாரிகளிடம் வட மாகாண ஆளுனர் கோரிக்கை



யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அதிகாரிகள் இப்போதே திட்டமிடல்களை மேற்கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை முன்வைத்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக யாழ்ப்பாணம் மாவட்டத்தின் இடர்நிலைமை மற்றும் எதிர்கால இடர்தணிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 28.11.2024 அன்று மாலை 28.11.2024 கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் சம்பந் துயகொத்தாவ, இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் ஆகியோரின் பங்கேற்புடன் நடைபெற்றது.

தற்போதைய இடர்நிலைமைகள் தொடர்பில் பிரதேச செயலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது. தமது பிரதேசத்தில் அதிகூடிய பாதிப்பு ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டிய பிரதேச செயலர்கள் எதிர்காலத்தில் அங்கு மேற்கொள்ளவேண்டிய வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் கோரிக்கை விடுத்தனர்.

குறிப்பாக இடர் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மாத்திரமே சமைத்த உணவு உள்ளிட்ட நிவாரணங்கள் வழங்கக் கூடியதாக இருப்பதாகவும் உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும் அவ்வாறான உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

பல இடங்களில் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு மரக்கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பு போதியளவு தேவையாக இருப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் இங்கு குறிப்பிட்டார். மேலும் தீவுப் பகுதிகளுக்கான மின்சாரத்துக்குரிய எரிபொருளை விரைந்து வழங்குவதற்கு கடற்படையினரின் ஒத்துழைப்பை ஆளுநர் கோரினார். கடற்படையினர் அதற்கு சாதகமான பதிலை வழங்கினர்.

இங்கு கருத்து வெளியிட்ட கௌரவ கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண ஆளுநர் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் அதற்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநராக நா.வேதநாயகன் அவர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் பல்வேறு பணிகளைச் செய்துள்ளார் எனவும் அவை வெளியில் தெரியவில்லை எனக் குறிப்பிட்ட அவர் அதனைப் பட்டியலிட்டு மக்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும் என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், இந்தக் கடினமான நேரத்தில் அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும் ஒருங்கிணைந்து பணியாற்றினர். அதற்கு முதலில் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்ட அவர் எதிர்காலத்திலும் இவ்வாறு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

குறிப்பாக வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக இடித்தகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரிய ஆளுநர், வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன மக்கள் வீடுகள் அமைக்கும்போது பெற்றுக்கொண்ட அனுமதிக்கு அமைவாக உரிய இடைவெளிகளில் வீடுகளை அமைக்கின்றார்களா என்பதைக் கண்காணிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் கௌரவ கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், இடர்நிலைமையின் போது முன்னெடுத்த கண்காணிப்பு நடவடிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கும் ஆளுநர், நன்றிகளைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன் ஆகியோரும், யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் கே.சிறிமோகன், யாழ். மாவட்ட இடர்முகாமைத்து உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ், பிரதேச செயலர்கள், முப்படையினர், திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**
MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்

உதயன் UTHAYAN

விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.

FRUITS HABY

பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்

5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்

செய்ய எங்களுடன்

தொடர்பு கொள்ளவும்.

416 752 1524

Keith Sanmugathas
Broker

Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000

416-666-9464
www.iselldreamcondos.ca

416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN உதயன்

உதயம் 1495 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday November 29, 2024

# தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த தினம் அவரது வல்வெட்டித்துறை இல்லத்தில் கொண்டாடப்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 70 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் 26ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.இராணுவம் மற்றும் பொலிஸாரின் கெடுபிடிகள் அற்ற நிலையில் இந்தக் கொண்டாட்டம் சாத்தியமானது என மக்களால் பேசப்பெற்றது.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஊர் மக்கள் ஒன்று திரண்டு வே.பிரபாகரன் அவர்களுக்கு கேக் வெட்டியும், இனிப்பு மற்றும் மரக் கண்டுகள் வழங்கியும் எழுச்சியான முறையில் இப் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்பெற்றன.





# "தமிழர்களைப் பொறுத்தளவில் சித்த ஆயுர்வேத வைத்தியமும் ஒரு தொழில் என்பதற்கு அப்பால் எமது பண்பாட்டின் அடையாளமாகும்"

## அமரர் கே.ஜி.சிவானந்தசிங்கம் அவர்களின் படைப்பான "ஆரோக்கிய வாழ்வு" மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



"இன்று எம்மால் நினைவு கூரப்படுபவரும் கொண்டாடப்படுபவருமான அமரர் கே.ஜி.சிவானந்தசிங்கம் அவர்கள் பணியாற்றிய வந்த துறையோ நீர்பாசன பொறியியல் துறையாகும். தனது தொழில் சார்ந்த காலப்பகுதியில் இலங்கையில் பல இடங்களிலும் அவர் மண்ணியல் மற்றும் நீர்பாசன விஞ்ஞானம் ஆகியவற்றில் முத்திரை பதித்திருந்தாலும். துனுத தந்தையின் முழுநேரப் பணியான சித்த ஆயுர்வேத வைத்தியத்துறையில் ஆர்வம் கொண்டு தனது தந்தையிடமிருந்து அதன் நுட்பங்களையும் அவசியத்தையும் அதற்குள் அடங்கியிருக்கின்ற மனித நேயத்தையும் கற்று தான் கற்றவற்றை தனது மறைவிற்குப் பின்னால் மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காக இன்று அவரது துணைவியார் ஜெயா மற்றும் அவரது புத்திரச் செல்வங்கள் ஆகியோர் இந்த நூலை வெளியிட்டு வைக்கின்றார்கள். அமரர் சிவானந்தசிங்கம் அவர்களது கனவு இவ்வாறான மருத்து குறிப்புக்கள் மற்றும் உடல் நலன் பேணும் தகவல்களை அறிந்தும் பின்பற்றியும் வந்தால் ஆரோக்கியமாக வாழலாம் என்ற அவரது உயரிய எண்ணமே இன்று ஒரு நூலாக வெளிவருகின்றது.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# Cultural Media Holiday Reception, hosted by the Premier of Ontario Hon Doug Ford and his Caucus Members

## ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களும் அவரது சக பாராளுமன்ற அங்கத்தவர்களும் அமைச்சர்களும் இணைந்து நடத்திய பல்லின பத்திரிகையாளர்களுக்கான வரவேற்புபசாரம்













"கனடா ஒரு பல்லின கலாச்சாரத்திற்கு மதிப்பளிக்கும் நாடாகவும் பல்லின மக்களை உலகெங்கிலுமிருந்து வரவேற்கும் நாடா-கவும் விளங்குவதால். இந்த தேசத்தின் மிகப்பெரிய மாகாணமாக விளங்கும் எமது ஒன்றாரியோ மாகாண அரசாங்கமும் பல்லின கலாச்சாரத்தையும் அதன் பெருமையையும் நன்கு உணரக் கூடியவர்களாக நாம் இன்று பத்திரிகையாளர்களாகிய உங்கள் முன்பாக மகிழ்ச்சியுடன் நின்று உங்கள் அனைவரையும் வரவேற்கின்றோம்.

பல்லின மக்களையும் அவர்களின் மொழி மற்றும் பண்பாடு போன்றை எம்மைப் போன்றவர்கள் அறிந்த கொள்ளும் வகையில் பத்திரிகையாளர்களாகிய உங்கள் அனைவரதும் சேவை முக்கியமாகதாக விளங்குகின்றது. எனவே உங்கள் அனை-வரையும் இன்றைய நாளில் எமது அரசாங்கத்தின் சார்பாகவும் மற்றும் எமது அமைச்சர்கள் அங்கத்தவர்கள் அனைவரதும் சார்பாகவும் வரவேற்கின்றோம்".

இவ்வாறு 28ம் திகதி வியாழக்கிழமையன்று மாலை ஒன்றாரியோ பாராளுமன்ற வளாகமான "குயின்ஸ்பார்க்" மண்டபத்தில் டிநடைபெற்ற முதல்வர் டக் போர்ட் அவர்களும் அவரது சக பாராளுமன்ற அங்கத்தவர்களும் அமைச்சர்களும் இணைந்து நடத்திய பல்லின பத்திரிகையாளர்களுக்கான வரவேற்புபசாரம் பல்லின பத்திரிகையாளர்களுக்கான வரவேற்புபசார நிகழ்வில் பிரதான உரையாற்றிய ஒன்றாரியோ மாகாண முதல்வர் கௌரவ ட்க் போர்ட் அவர்கள் தெரிவித்தார்.

ஸ்காபுறோ-அஜின்கோர்ட் தொகுதியின் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் அரிஸ் பாபிகியன் அவர்கள் ஆரம்ப உரையாற்றினார்.

மேலும் அமைச்சர் ரேமண்ட் சோ போன்றவர்களும் உரையாற்றினர். எமது தமிழ் பேசும் மாகாண் பாராளுமன்ற உறுப்பினர்களாக லோகன் கணபதி மற்றும் விஜேய் தணிகாசலம் ஆகியோரும் அங்கு சமுகளித்து அனைத்த பத்திரிகையாளர்களோடு உரையாடி மகிழ்ந்து அவர்களின் சேவைகளுக்காக அனைவரையும் பாராட்டினர்.